
# ஓய்வூதியம்

## வினா-விடை



அர. கிருட்டிணமூர்த்தி

# ஓய்வூதியம்

## வினா - விடை

தொகுப்பாளர்
அர. கிருட்டிண மூர்த்தி

மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி
அறக்கட்டளை,
கடலூர் - 607001.

# நூற்குறித்து


| | |
|---|---|
| நூற்பெயர் | **ஒய்வூதியம் - வினா விடை** |
| ஆக்கம் | மின்வாரிய ஒய்வூதியர் முன்னேற்ற சங்கம், கடலூர் |
| பதிப்பாளர் | **மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை,** "சேயகம்," 25/49, துரைசாமி நகர், கடலூர், 607 001. 04142-221970. |
| உரிமை | பதிப்பாளர்க்கு |
| பக்கம் | VI+ 64 = 70 |
| தாள் | மேப்லித்தோ |
| எழுத்து | தமிழ் 12 புள்ளி |
| விலை | உரூபா 25/- |
| நூல் பெற | **சா. வேல்முருகன்,** 14, துரைசாமி நகர், கடலூர், 607 001. பேசி: 04142-230945, 9444354945. |
| | **அர. கிருட்டிண மூர்த்தி.** 11, 6-ஆவது குறுக்குத் தெரு, சுப்பராயலு நகர், கடலூர் - 607 002, பேசி:9443123877 |
| அச்சுக் கோவை | **சா. வேல்முருகன்** |
| அட்டைப்படம் | **இளம்பரிதி, கடலூர்.** |
| அச்சிட்டோர் | **சபாநாயகம் அச்சகம்,** 73-A, கீழ இரத வீதி, சிதம்பரம் - 608 001, பேசி: 04144-223040. |

# பதிப்புரை

இந்நூல், அரசு துறையைச் சார்ந்த ஓய்வூதியம் பெறும் அனைத்துத் தரப்பினர்க்கும் ஏற்ற பொதுவான செய்திகளைக் கொண்டது. காட்டுக்கள் மின்வாரிய ஓய்வூதியர்க்கு ஆனவை.

தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதியர் முன்னேற்ற சங்கக் கடலூர்க் கிளை, 2003-ஆம் ஆண்டில் ஓய்வூதியர் களஞ்சியம் என்ற அரிய பயன்பாட்டு நூலைப் பெரும் உழைப்பின் பயனாய் வெளியிட்டது. அதன் திருத்திய கையடக்கப் பதிப்பு 2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு விற்றுத் தீர்ந்தன.

இவ்விரு பதிப்புக்களிலுமே வினா - விடை என்ற பகுதி எல்லாராலும் விரும்பிப் படிக்கப்பட்டுப் பாராட்டப் பெற்றது. அதன் அருமை அறிந்து, தமிழ்நாடு அரசு பணியாளர் ஓய்வூதியர் சங்கக் கடலூர்க் கிளை தங்கள் விழா மலரில் வெளியிட்டுப் பயனடைந்து மகிழ்ந்தனர்.

இவ் வினா - விடைப் பகுதியை விரிவு படுத்தித் தனியே ஒரு சிறு நூலாக வெளியிடின் எல்லார்க்குமே பயன்படும் என்ற **அர. கிருட்டிண மூர்த்தியின்** எண்ணத்தின், உழைப்பின் வெளிப்பாடே இந்நூல். ஓய்வூதியர் நலனிற்காக ஓயாது உழைத்துவரும் அன்னார்க்கு உறு துணையாய், உதவியாய் அமைந்தவர் சா. **வேல்முருகன்**, ந. **சுப்பையா**, த. **கலிய பெருமாள்**, ஜா. **ஜெயபாலன்** ஆவர். அனைவர்க்கும் நன்றி.

முதலிரு நூற்கள் வெளியீட்டில் எங்கள் அறக்கட்டளை உறுப்பினர் பலரும் பெரும் பங்கு கொண்டு உதவிய பெற்றி கண்டு, இந்நூலை எங்கள் வழி வெளியிட ஒப்புதல் அளித்த தமிழ்நாடு மின்வாரிய ஓய்வூதியர் முன்னேற்ற சங்கம், கடலூர்க் கிளை அன்பர் அனைவர்க்கும் நன்றி.

புலவர்-பொறிஞர் **சி.செந்தமிழ்ச்சேய்.**
தலைவர்,
மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை.

## நூலாக்கக் குழு

சா. வேல்முருகன்
ந. சுப்பையா
அர. கிருட்டிண மூர்த்தி
த. கலியபெருமாள்
ஜா. ஜெயபாலன்

ஒருங்கமைப்பு:

சி.செந்தமிழ்ச்சேய்

# நூற்குள்ளே


| | | |
|---|---|---|
| 01. | பணி ஒய்வு | 01 |
| 02. | மூப்போய்வு | 02 |
| 03. | விருப்போய்வு | 05 |
| 04. | இயலாமை ஒய்வு | 09 |
| 05. | கட்டாய ஒய்வு | 11 |
| 06. | இடைக்கால ஒய்வூதியம் | 15 |
| 07. | இழப்பீட்டு ஒய்வுதியம் | 16 |
| 08. | கருணைப் படி | 16 |
| 09. | கருணை ஒய்வூதியம் | 17 |
| 10. | தகுதி பெறு பணிக்காலம் | 19 |
| 11. | ஒய்வூதியம் | 20 |
| 12. | சேவைப் பணிக்கொடை | 26 |

| | | |
|---|---|---|
| 13. | குடும்ப ஓய்வூதியம் | 27 |
| 14. | இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை | 36 |
| 15. | ஓய்வூதியத் தொகுப்பளிப்பு | 40 |
| 16. | பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் | 44 |
| 17. | சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை - 1984 | 46 |
| 18. | சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை - 2000 | 47 |
| 19. | ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் | 48 |
| 20. | ஓய்வூதியர் மருத்துவ நலத்திட்டம் | 50 |
| 21. | பணிப் பாராட்டு | 53 |
| 22. | ஓய்வுப் பயணப்படி | 54 |
| 23. | இறந்த பணியாளர் இறுதிப் பயணச் சலுகை | 55 |
| 24. | பிற செய்திகள். | 56 |

# ஓய்வூதியம்

## வினா-விடை

### பணி ஓய்வு

### 1. பணி ஓய்வு என்றால் என்ன?

குறிப்பிட்ட அகவை வரை ஒருவரால் ஏற்பாகப் பணியாற்றல் இயலும் என்று அரசால் அவ்வப்போது வரையறை செய்யப்படும் காலத்திற்குப் பின்னர், முதுமை காரணமாகப் பணியினின்று விடுபடுதலே பணி ஓய்வு ஆகும்.

முதுமை காரணமாகவே அன்றி, ஒருவர் தன் விருப்பத்தின் மேலும் இயலாமையாலும் இடையே பணி ஓய்வு பெறலும் உண்டு. இவையே அல்லாமல், ஒரு பணியாளரைச் சில காரணங்கட்காக இடையே கட்டாய ஓய்வு அளித்து அனுப்பலும் உண்டு.

### 2. பணி ஓய்வு வகைகள் யாவை?

மூப்போய்வு, விருப்ப ஓய்வு, இயலாமை ஓய்வு, கட்டாய ஓய்வு, இழப்பீட்டு ஓய்வு, ஈடுகட்டும் ஓய்வு, கருணை ஓய்வு.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978, விதி 32 முதல் 40 வரை.*

### 3. பணி ஓய்வு பெறுபவர் பெறு இறுதிப் பணப் பயன்கள் யாவை?

பல்லாண்டுகள் பணியாற்றிய பணியாளர் ஓய்வு பெறுங்கால் பெறற்குரிய இறுதிப் பயன்களாவன:

1. ஓய்வூதியம் (Pension),
2. அகவிலைப் படி (Dearness Allowance),
3. மருத்துவப் படி (Medical Allowance),
4. இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை (Death cum Retirement Gratuity),
5. ஓய்வூதியத் தொகுப்பளிப்பு (Commutation of Pension),
6. ஈட்டு விடுப்புப் பணமாற்றுகை (Encashment of E/L),
7. குடும்பப் பாதுகாப்பு நிதி (Family Security Fund),
8. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை - 1984 (Special Provident Fund cum Gratuity - 1984),
9. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை - 2000 (Special Provident Fund cum Gratuity - 2000),
10. பொது வைப்பு நிதி (General Provident Fund),
11. பயணப் படி.

## மூப்போய்வு

### 4. பணியாளர் மூப்போய்வு எப்போது பெறுவர்?

உயர்நிலைப் பணியாளர்தம் அகவை 58 முடியும் போதும் அடிப்படைப் பணியாளர்தம் அகவை 60 முடியும் போதும் அவர் பணியிலிருந்து மூப்போய்வு பெறுவர்.

### 5. அகவை 60 முடியும் போது ஓய்வு பெறுபவர் யார்?

அலுவலக உதவியாளர், தலைமை ஏவலர், காவலர், தோட்டப் பணியாளர், துப்புரவுப் பணியாளர், திறனில் பணியாளர் ஆகியோர்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 71576 நாள் 16-4-1984*

**6. அடிப்படை / உயர்நிலைப் பணியாளர் யார்?**

அலுவலக உதவியாளர், தலைமை ஏவலர், காவலர், தோட்டப் பணியாளர், துப்புரவுப் பணியாளர், திறனில் பணியாளர் ஆகியோர் TNEB பணி ஒழுங்குமுறை விதி 17 (A) முதல் 17 (E) இன்படி அடிப்படைப் பணியாளர் ஆவர். மற்றவர் உயர்நிலைப் பணியாளர் ஆவர்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 71576 நாள் 16-4-1984.*

**7. பணியாளரின் மூப்போய்வு பெறும் நாள் எவ்வாறு முடிவு செய்யப் படுகிறது?**

பணியாளரின் பிறந்த நாள் மாத முதல் நாளாக இருப்பின், முந்தைய மாதத்தின் கடைசி நாளில் அவர் ஒய்வு பெறுவார். பிறந்த நாள் மாத முதல் நாளாக அமையாத போது, அவர் பிறந்த மாதத்தின் கடைசி நாளில் ஓய்வு பெறுவார்.

*மின்வாரியப் பணி ஒழுங்குமுறை விதி எண்: 17* (A to E).

**8. நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கை முடிவுக்கு வராத நிலையில், இடைக்காலப் பணிநீக்கத்தில் (suspension) உள்ள பணியாளர் மூப்போய்வில் செல்ல முடியுமா?**

முடியாது.

*மின்வாரிய ஆணை எண்: 64 நாள் 16-8-1997.*

**9. கடுமையான குற்றச்சாட்டுக் காரணமாகப் பணி இடைநீக்கத்தில் உள்ளவரின் நிலை, மூப்போய்வு பெறு நாளன்று என்னவாகும்?**

பணியிடை நீக்கம் தொடரும்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 209514 நாள் 3-4-1984.*

**10. ஒழுங்கு நடவடிக்கை அல்லது நீதிமன்ற நடவடிக்கை முடியும் வரை இடைக்காலப் பணிநீக்கத்தில் உள்ள பணியாளர்க்குப் பணி நீட்டிப்பு உண்டா?**

உண்டு.

*மின்வாரிய ஆணை எண்: 64 நாள் 16-8-1997.*

### 11. பணி நீட்டிப்புக் காலத்தில் ஊதியம் உண்டா?

பிழைப்பூதியம் (subsistance allowance) வழங்கப்படும்.

*மின்வாரியப் பணி ஒழுங்குமுறை விதிகள் எண்: 56(1)*
*மின்வாரிய ஆணை எண்: 64 நாள் 16-8-1997.*

### 12. பிழைப்பூதியத்தின் அளவு என்ன?

இடைக்கால ஓய்வூதியத்துக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 64 நாள் 16-8-1997.*

### 13. வாரியத்திற்கு இழப்பீடு இல்லா நிலையில் சிறிய தவற்றிற்கான நடவடிக்கையாக இருப்பின், மூப்போய்வில் செல்ல இசைவளிக்கலாமா?

இசைவளிக்கலாம். மேலும் நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்படும்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 209514 நாள் 3-4-1984.*

### 14. ஒழுங்கு நடடிக்கை நிலுவையில் உள்ளபோது பணியாளர் இறக்க நேரிடின், ஒழுங்கு நடவடிக்கை என்னவாகும்?

கைவிடப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 1073 நாள் 27-5-1972.*

### 15. பணியாளர், பணி இடைநீக்கக் காலத்தில் இறக்க நேரிடின், தொடர் நடவடிக்கை என்ன?

எவ்வித ஆணையுமில்லாமல் பணி இடைநீக்கக் காலம் பணிக் காலமாகக் கொள்ளப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 1073 நாள் 27-5-1972.*

## விருப்போய்வு

### 16. விருப்போய்வில் செல்வதற்கான தகுதி என்ன?

தகுதி பெறு பணிக்காலம் (Qualifying service) 20 ஆண்டுகள் முடிந்தோ அல்லது அகவை 50 முடிந்தோ இருக்க வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 247 நாள் 29-7-1985,*
*மின்வாரிய ஆணை எண்: 6 நாள் 25-1-1993.*

### 17. வாரியப் பணிக்காக அயல் நாடுகளில் பணி செய்பவர் விருப்போய்வில் செல்லலாமா?

செல்லலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 247 நாள் 29-7-1985.*

### 18. விருப்போய்வில் செல்ல விண்ணப்பிப்பது எப்படி?

குறைந்தது 3 மாதம் முன்பாக விருப்போய்வு அறிவிப்பு விண்ணப்பத்தினைப் பணி அமர்த்து அலுவலரிடம் நேரடியாக அளிக்க வேண்டும். அதன் படியை வழிமுறையாகவும் அனுப்ப வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 6 நாள் 25-1-1993,*
*மின்வாரிய ஆணை எண்: 222 நாள் 11-6-1984.*

### 19. விருப்போய்வில் செல்ல 3 மாதக் கணக்கீடு என்பது எவ்வாறு?

பணி அமர்த்து அலுவலரால் விருப்போய்வு அறிவிப்பு விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து கணக்கிட வேண்டும்.

*மின்வாரியக் குறிப்பாணை ஆணை எண்: 46362 நாள் 27-4-1994.*

### 20. விருப்போய்வில் செல்லத் தகுதிபெறு பணிக்காலம் முடிவதற்கு முன் விண்ணப்பிக்கலாமா?

விண்ணப்பிக்கலாம். ஆனால் அவ்விண்ணப்பம் தகுதிபெறு பணிக்காலம் முடிந்த பின்னரே ஆய்வு செய்யப் படும்.

*மின்வாரிய ஆணை எண்: 6 நாள் 25-1-1993.*

### 21. பணியாளர் இடைக்காலப் பணி நீக்கத்தில் இருக்கையிலோ அல்லது அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருக்கையிலோ, விருப்போய்வில் செல்லல் இயலுமா?

பணி அமர்த்து அலுவலரின் சிறப்பு அனுமதி பெற்றுச் செல்லலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 77 நாள் 14-3-1983,*
*மின்வாரியப் பணி ஒழுங்குமுறை விதிகள் எண்: 17* (g).

### 22. விருப்போய்வில் செல்லத் தடையாக இருப்பவை யாவை?

i. ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருத்தல்

ii. காவல் துறையின் குற்றச் சாட்டோ அல்லது நீதிமன்ற வழக்கோ நிலுவையில் இருத்தல்

iii. பணிக்கொடையில் ஈடு செய்ய இயலாத அளவிற்குப் பிடித்தம் செய்ய வேண்டிய தொகை நிலுவையில் இருத்தல்

iv. விழிப்புப்பணித் துறை நடவடிக்கைகள் நிலுவையில் இருத்தல்

*மின்வாரியச் செயலகக் கிளைக் குறிப்பாணை எண்: 1281 நாள் 21-6-1996.*
*மின்வாரியப் பணி ஒழுங்குமுறை விதிகள் எண்: 17* (gg).

### 23. விருப்போய்வில் விடுவிக்க எத்தனை நாட்களுக்குள் அனுமதி அளிக்கப்பட வேண்டும்?

பணியாளரின் விண்ணப்பம் பெறப்பட்ட 3 மாதத்திற்குள் அனுமதிக்கவோ அல்லது மறுக்கவோ வேண்டும். அவ்வாறு

செய்யாவிடில், பணியாளர் விருப்போய்வில் செல்ல அனுமதி அளிக்கப் பட்டதாகக் கருதப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 6 நாள் 25-1-1993,*
*மின்வாரியக் குறிப்பாணை எண்: 1281 நாள் 21-6-1996.*

## 24. விருப்போய்வில் செல்பவர்க்குச் சிறப்புப் பணிக்காலம் அளிக்கப்படுமா?

ஐந்தாண்டுகட்கு மிகாமல் அளிக்கப்படும். ஆனால், தகுதி பெறு பணிக்காலம், சிறப்புப் பணிக்காலத்தையும் சேர்த்து 30 ஆண்டுகளைக் கடக்கக் கூடாது; அகவையும் 58 ஐக் கடக்கக் கூடாது.

*மின்வாரிய ஆணை எண்: 51 நாள் 22-6-1988,*
*மின்வாரியக் குறிப்பாணை எண்: 1281 நாள் 21-6-1996.*

## 25. விருப்போய்வில் செல்பவர்க்குச் சிறப்புப் பணிக்காலம் சேர்ப்பதால், ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப் படுமா?

அளிக்கப் படாது.

*மின்வாரிய ஆணை எண்: 51 நாள் 22-6-1988,*
*மின்வாரியப் பணி ஒழுங்குமுறை விதிகள் எண்: 17* (gg) d (ii).

## 26. விருப்போய்வில் செல்பவர்க்குச் சிறப்புப் பணிக்காலம் சேர்த்துக் கணக்கீடு செய்வது எவ்வாறு?

விருப்போய்வு செல்பவரின் பிறந்த நாள், விடுப்போய்வு நாள், பணி நிலைப்பாடு செய்த நாள், ஊதியம் இல்லா விடுப்பு (EOL) ஆகியவற்றைக் கொண்டு தகுதி பெறு பணிக்காலம் கணக்கிடப் படும்.

*மின்வாரிய ஆணை எண்: 16 நாள் 6-3-2002.*

எடுத்துக் காட்டு:

| | நா - மா - ஆ |
|---|---|
| ஓய்வு | 31-7-2002 |
| பணியில் சேர்ந்த நாள் | 1-1-1976 |
| பணிக்காலம் | 30-6- 26 |
| EOL | 20-5- 1 |
| தகுதிபெறு பணிக்காலம் | 10-1- 25 |
| சிறப்புப் பணிக்காலம் | 14-5- 2 |
| நிகர தகுதி பெறு பணிக்காலம் | 24-6- 27 |

(இது 30 ஆண்டுகளைக் கடக்கக் கூடாது)

| | நா - மா - ஆ |
|---|---|
| ஓய்வு | 31-7-2002 |
| பிறந்த நாள் | 15-1-1947 |
| அகவை | 16-6- 55 |
| சிறப்புப் பணிக்காலம் | 14-5- 2 |
| | 0-0- 58 |

(இது 58 ஆண்டுகளைக் கடக்கக் கூடாது)

**27. விருப்ப ஓய்வில் செல்பவர் இறுதி 3 மாதங்கள் தொடர்ந்து பணியில் இருக்க வேண்டுமா?**

ஆம். தொடர் தகுதிபெறு பணிக்காலமாக இருக்க வேண்டும்.

*தமிழ்நாடு அரசு அடிப்படை விதி எண்: 56 (3) (C) 1.*

*தமிழ்நாடு அரசு கடித எண்: 73081 நாள் 25-9-1992*

**28. விருப்போய்வில் செல்பவர் ஊதியமில்லா விடுப்பில் சென்றால் விருப்போய்வில் செல்ல இசைவளிக்கலாமா?**

இசைவளிக்க முடியாது.

*தமிழ்நாடு அரசு அடிப்படை விதி எண்: 56 (3) (C) 1.*

*தமிழ்நாடு அரசு கடித எண்: 73081 நாள் 25-9-1992*

new text

## இயலாமை ஓய்வு

**29. இயலாமை ஓய்வில் செல்ல விண்ணப்பித்தல் வேண்டுமா?**

ஆமாம். மருத்துவச் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 36.*

**30. ஆட்சி (நிர்வாகம்), பணியாளர் ஒருவரை இயலாமை ஓய்வில் அனுப்ப முடியுமா?**

முடியும். பணியாளரை மருத்துவக் குழுவின் ஆய்விற்கு உட்படுத்திச் சான்று பெற்று அனுப்பலாம்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 36.*

**31. ஒன்றாம் மற்றும் இரண்டாம் நிலைப் பணியாளர் இயலாமை ஓய்வில் செல்ல யாரிடம் இயலாமைச் சான்று பெற வேண்டும்?**

மருத்துவக் குழுவின் சான்றிதழ் பெற வேண்டும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 36.*

**32. மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப் பணியாளர் இயலாமை ஓய்வில் செல்ல யாரிடம் இயலாமைச் சான்று பெற வேண்டும்?**

குடிமை அறுவை மருத்துவரிடம் (Civil surgion) சான்று பெறுதல் போதும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 36.*

**33. பணியாளரின் நோய் சிகிச்சையால் தீர்க்கக் கூடியதாய் இருந்து, சிகிச்சைக்கு உட்பட மறுத்த அவரைப் பணிக்கு இயலாதவர் என்று சான்று அளித்தால் அவர்க்கு ஓய்வூதியம் வழங்கப் படுமா?**

ஓய்வூதியம், பணிக்கொடை வழங்கப்பட மாட்டாது.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 36, குறிப்பு (2).*

**34. எந்த நிலையில் இயலாமைச் சான்றினை வாரியத்திற்கு அனுப்பி அனுமதி பெற வேண்டும்?**

ஒழுங்கற்ற அளவுக்கு மீறிய பழக்க வழக்கங்களால் பணிக்கு இயலாதவர் என்று சான்றளிக்கப்பட்ட நிலையில்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 36, குறிப்பு(10).*

**35. எந்த நிலையில் மருத்துவப் பணி இயக்குநரின் மேலொப்பம் பெறல் வேண்டும்?**

பணியாளர், தான் பணியாற்றும் மாவட்டத்தில் சான்று பெறாமல் வேறு மாவட்ட மருத்துவ அலுவலரிடம் பணி இயலாமைச் சான்று பெறும்போது.

*மின்வாரியப் பணி ஒழுங்குமுறை விதிகள் எண்: 81* (C)3.

**36. பணியாளர் பணியில் இருக்கையில் இயலாமைக்கான சான்று பெறப்பட்டவுடன், என்ன செய்ய வேண்டும்?**

உடனடியாக இயலாமை ஓய்வில் விடுவிக்கப் படல் வேண்டும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 36 , குறிப்பு (6).*

**37. பணிக்கு இயலாதவர் எனச் சான்றளிக்கப்பட்ட பணியாளர், சிறப்பு விடுப்பு அல்லாத ஒப்புதல் அளிக்கப்பட்ட விடுப்பில் இருந்தால் எப்போது விடுவிக்கப் படல் வேண்டும்?**

ஒப்புதல் அளிக்கப்பட்ட விடுப்பின் முடிவில் அல்லது விடுப்பு நீட்டிப்பின் முடிவில்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 36, குறிப்பு (6).*

### 38. பணியாளர் சிறப்பு விடுப்பில் இருந்தால் எப்போது விடுவிக்கப் படுவார்?

பணிக்கு இயலாதவர் எனச் சான்றளிக்கப்பட்ட நாளிலிருந்து.

*மின்வாரியப் பணி ஒழுங்குமுறை விதிகள்: 85.*

### 39. இயலாமை ஓய்வில் சென்றவரின் வாரிசுக்கு வேலை வாய்ப்பு உண்டா?

உண்டு. ஆனால், இயலாமை ஓய்வில் செல்லும் நாளில் பணியாளரின் அகவை 53 நிறைவெய்தாமல் இருக்க வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 25 நாள் 9-10-2001.*

### 40. இயலாமை ஓய்வு பெறுபவர்க்குப் பணிக்காலச் சிறப்பளிப்பு உண்டா?

இல்லை.

*மின் வாரியப் பணி ஒழுங்கு முறை விதிகள்: 80 முதல் 86 வரை.*

### 41. இயலாமை ஓய்வில் செல்பவர்க்கு ஓய்வூதியத் தொகுப்பளிப்பு (commutation of pension) உண்டா?

உண்டு. மருத்துவக் குழுவின் ஆய்விற்கு உட்படுத்தி, அக்குழுவின் பரிந்துரைப்படி தரப்படும்.

*தமிழ்நாடு குடியரிமை ஓய்வூதிய விதி, 1944 - விதி 7(1).*

## கட்டாய ஓய்வு

### 42. கட்டாய ஓய்வு என்றால் என்ன?

தொழில் தகராறு ஆணை (சட்டம்) 1947-இன் கீழ் வரும் பணியாளர் தவிர்த்து, ஆட்சி நலன் காரணமாகப் பிற பணியாளரை ஓய்வில் அனுப்புதல்.

*மின்வாரியப் பணி ஒழுங்குமுறை விதிகள்: 17 (g).*

**43. ஒரு பணியாளரைக் கட்டாய ஓய்வில் எப்போது வேண்டுமானாலும் அனுப்ப முடியுமா? ஏதேனும் பணிக்கால வரைமுறை உண்டா?**

"முடியாது. பணிக்கால வரைமுறைக்கு உட்பட்டே கட்டாய ஓய்வில் அனுப்ப முடியும்.

பணியாளரின் தகுதிபெறு பணிக்காலம் 30 ஆண்டுகள் அல்லது அகவை 50 ஆண்டுகள் முடிந்தபின், எப்போது வேண்டுமானாலும் 3 மாதத்திற்குக் குறையாத முன்னறிவிப்புக் கொடுத்தோ, மூன்று மாத ஊதியங்களைக் கொடுத்தோ கட்டாய ஓய்வில் அனுப்பலாம்.

*மின்வாரியப் பணி ஒழுங்குமுறை விதிகள்: 17 (g).*

**44. தண்டனை காரணமாகப் பணியாளர் பணி நீக்கம், பணி விலக்கல், கட்டாய ஓய்வு இவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு உட்படும்போது, அதுவரையான பணியிடை நீக்கக் காலம் என்னவாகும்?**

மேற்படி தண்டனைக்கான ஆணை வழங்கப்படு நாள் வரை உள்ள காலம் பணிக்காலமாகக் கொள்ளப் படும்.

*மின்வாரிய ஆணை எண்: 108 நாள் 10-3-1987,*
*மின்வாரிய ஆணை எண்: 322 நாள் 28-11-1989.*

**45. கட்டாய ஓய்வில் அனுப்பப் படுபவர்க்குப் பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை-1984 திட்டத்தின் கீழ் வாரியப் பங்களிப்பு உருபா 10,000/ வழங்கப்படுமா?**

வழங்கப்படமாட்டாது.

*மின்வாரிய ஆணை எண்: 40நாள் 6-7-2001,*
*மின்வாரிய ஆணை எண்: 76 நாள் 31-8-1985.*

**46. ஒருவர்க்குக் கட்டாய ஓய்வளிக்கும் போது தண்டனை வழங்கும் அலுவலர் செய்ய வேண்டியது என்ன?**

ஓய்வூதியம் பெறும் வகையில் தண்டனை அளிக்க வகை செய்ய வேண்டும்.

**47. கட்டாய ஓய்வில் விடுவிக்கப்பட்டவர் மீதுள்ள ஒழுங்கு நடவடிக்கை என்னவாகும்?**

கை விடப்படும். எவ்வித தொடர் நடவடிக்கையும் இராது.

*மின்வாரிய ஆணை எண்: 10 நாள் 18-1-1983.*

**48. கட்டாய ஓய்விற்கான ஆணை வழங்கப்பட்ட பின்னர், எத்தனை நாட்களுக்குள் மேல் முறையீடு செய்தல் வேண்டும்?**

ஒரு மாதத்திற்குள்.

*மின்வாரிய ஆணை எண்: 175 நாள் 28-12-1983.*

**49. கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டவர், மேல் முறையீட்டின் அடிப்படையில் மீண்டும் பணி அமர்த்தப்படுவாரா?**

அமர்த்தப்படலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 363 நாள் 21-9-1987.*

**50. அப்படி மீண்டும் பணி அமர்த்தப்படில், அவர்க்கு அளிக்கப்படும் ஊதியம் என்ன?**

கட்டாய ஓய்வு நாள் முதல் பணியில் அமரும் நாள் வரை பணிக்காலமாகக் கொண்டு, அவர்க்கு என்ன உரியதோ அந்த முழு ஊதியம், அகவிலைப்படியுடன் பெறத் தகுதி உடையவர் ஆவார்.

*மின்வாரிய ஆணை எண்: 363 நாள் 21-9-1987.*

**51. கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டவர் ஈட்டிய விடுப்பைப் பணமாக்கிக் கொள்ளலாமா?**

பணமாக்கிக் கொள்ளலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 83 நாள் 3-9-1986,*
*மின்வாரிய ஆணை எண்: 75 நாள் 6-11-1996.*

**52. தண்டனையாகக் கட்டாய ஓய்வு அளிக்கப் பட்டவர்க்கு ஓய்வூதியத் தொகுப்புப்பளிப்புப் (commutation) பெற உரிமை உண்டா?**

உண்டு. ஆனால், அவர் தன்னை மருத்துவ ஆய்வுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

*மின்வாரியக் குறிப்பாணை ஆணை எண்: 57792 நாள் 8-1-1988.*

**53. தண்டனையாக இல்லாமல் கட்டாய ஓய்வில் அனுப்பப் பட்டவர் ஓய்வூதியத் தொகுப்பளிப்புப் பெற மருத்துவ ஆய்விற்கு உட்படல் கட்டாயமா?**

ஓய்வூதிய ஆணை பெறப்பட்ட ஓராண்டிற்குள் எனில், தேவை இல்லை. அதற்குப் பின்னர் எனில், மருத்துவக் குழுவின் ஆய்விற்கு உட்படல் வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 275 நாள் 19-7-1984,*
*மின்வாரியக் கடித எண்: 57792 நாள் 8-1-1988.*

**54. கட்டாய ஓய்வில் அனுப்பப் பட்டவர்க்குப் பணிக்காலச் சிறப்பளிப்பு உண்டா?**

இல்லை.

*மின்வாரிய ஆணை எண்: 51 நாள் 22-6-1988.*

**55. பணி இடை நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்க்குக் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டால், அவர் எந்த நாளில் விடுவிக்கப்படுவார்?**

கட்டாய ஓய்வு அளித்து ஆணையிடப்பட்ட நாளிலிருந்து விடுவிக்கப் பட்டவராகக் கருதப்படுவார்.

*மின்வாரிய ஆணை எண்: 108 நாள் 10-3-1987*

## இடைக்கால ஓய்வூதியம்

### 56. இடைக்கால ஓய்வூதியம் என்றால் என்ன?

ஆட்சிமுறை ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளபோது ஓய்வுபெற இசைவளிக்கப்பட்ட நிலையில் வழங்கப்படும் ஓய்வூதியம்.

*மின்வாரியக் கடித எண்: 77924 நாள் 19-2-1994.*

### 57. இடைக்கால ஓய்வூதியத்தை எத்தனை காலம் நீட்டிக்கலாம்?

துறை நடவடிக்கை அல்லது நீதிமன்ற நடவடிக்கை முடியும் வரை நீட்டிக்க வேண்டும்.

*மின்வாரியக் கடித எண்: 79505 நாள் 17-12-1994.*

### 58. இடைக்கால ஓய்வூதியத்தின் அளவு என்ன?

நிலைத்த ஓய்வூதியத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும்.

*மின்வாரியக் கடித எண்: 37359நாள் 2-9-1987.*

### 59. இடைக்கால ஓய்வூதியம் பெற்று வருபவர் இறக்க நேரிடின், அவரின் வாரிசுக்குக் குடும்ப ஓய்வூதியம் உண்டா?

உண்டு. ஓய்வூதியர் பெற்று வந்த இடைக்கால ஓய்வூதியம், மேலும் 12 மாதங்கள் வரை மட்டும் தொடரும். அதற்குள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தேவையான அனைத்து ஆவணங்களையும் கொடுத்துக் குடும்ப ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

*மின் வாரிய ஆணை எண்: 86 நாள் 20-11-1999.*

## இழப்பீட்டு (ஆட்குறைப்பு) ஓய்வூதியம்

**60. இழப்பீட்டு ஓய்வூதியம் (compensation pension) என்பதென்ன?**

பணி நிலை நிறுத்தப்பட்ட பின்னர், அரசு கொள்கை முடிவின் காரணமாக ஆட்குறைப்புச் செய்யப்பட்டு, அதே நிலையிலுள்ள வேறு பணி இருந்து அதில் சேர்ந்து கொள்ளப் பணியாளர் ஏற்கா நிலையில் ஓய்வில் அனுப்பப்படும் பொழுது வழங்கப்படும் ஓய்வூதியமே இழப்பீட்டு ஓய்வூதியம்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 38(1).*

**61. இழப்பீட்டு ஓய்வூதிய அளவு எவ்வளவு?**

பணி செய்த காலத்திற்கான இயல்பான ஓய்வூதியம் வழங்கப் படும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 38,*

## கருணைப்படி

**62. கருணைப்படி (compassionate allowance) என்றால் என்ன?**

தவறான செய்கைக்காகப் பணியிலிருந்து நீக்கப் படுபவர்க்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்கப்பட மாட்டாது. ஆனால் உரிமை உடைய அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் கருணைப்படி வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 40.*

**63. கருணைப்படி வழங்கப்படும் அளவு எவ்வளவு?**

மருத்துவச் சான்றிதழுடன் அவர் ஓய்வு பெற்றிருந்தால், அவர்க்குக் கிடைத்திருக்கக் கூடிய ஓய்வூதியத்தில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மிகாமல் கருணைப் படியோ, அல்லது மூன்றில் இரண்டு பங்கிற்கு மிகாமல் பணிக்கொடையோ அல்லது இரண்டுமோ வழங்கலாம்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 40.*

## கருணை ஓய்வூதியம்

### 64. கருணை ஓய்வூதியம் (ex-gratia pension) யார் யார்க்கு வழங்கப் படுகிறது?

1-7-1986-க்கு முன்னர்ப் பணி ஓய்வு பெற்றுப் பின்னர் இறந்துபட்ட களப்பணியாளரின் வாரிசுக்கு 31-12-1990 முதல் வழங்கப்படுகிறது.

*மின்வாரிய ஆணை எண்: 151 நாள் 3-7-1993.*

1-7-1986-க்கு முன்னர்ப் பணி ஓய்வு பெற்று இப்போது உயிருடன் இருக்கும் களப்பணியாளர்க்கும் 1-2-2006 முதல் வழங்கப்படுகிறது.

*மின்வாரிய ஆணை எண்: 15 நாள் 18-2-2006.*

### 65. கருணை ஓய்வூதிய அளவு என்ன?

1-8-2006 முதல் உருபா 908/ -உம் அதற்கான அகவிலைப் படியும் ஆகும்.

*மின்வாரிய ஆணை எண்: 188 நாள் 12-7-2006.*

### 66. கருணை ஓய்வூதியம் மகன்/ மகளுக்கு வழங்கப்படுமா?

வழங்கப்படும்.

மகன்களுக்கு 25 வயது வரை அல்லது வேலையில் சேரும் வரை, இவற்றில் எது முன்னரோ அது வரை அளிக்கப்படும்.

திருமணமாகா மகள்களுக்கு 25 வயது வரை அல்லது வேலையில் சேரும் வரை அல்லது திருமணமாகும் வரை, இவற்றில் எது முன்னரோ, அது வரை அளிக்கப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 151 நாள் 3-7-1993.*

## 67. இப்போது கருணை ஓய்வூதியத்திற்கு அகவிலைப்படி எவ்வளவு அளிக்கப் படுகிறது?

1-1-2013 முதல் 158%

*மின்வாரிய ஆணை எண்: 188 நாள் 12-7-2013.*

## 68. 1-7-1986-க்கு முன்னர் ஓய்வு பெற்றவர் காணாமல் போய்விடின், அவரின் குடும்பத்தார்க்குக் கருணை ஓய்வூதியம் உண்டா?

காணாமல் போனவர் உரிமையியல் (civil death) இறப்பு அடைந்தார் என நீதிமன்றத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டால் உண்டு.

*மின்வாரிய ஆணை எண்: 233 நாள் 2-9-1991,*
*மின்வாரியக் குறிப்பாணை எண்: 47202- N1 நாள் 5-3-1993.*

## 69. கருணை ஓய்வூதியர்க்குப் பொங்கற் பரிசு உண்டா?

உண்டு.

*மின்வாரிய ஆணை எண்: 11 நாள் 18-1-2011*

## 70. கருணை ஓய்வூதியம் பெறற்கான உரிய படிவம் எந்த வாரிய ஆணையில் உள்ளது?

மின்வாரிய ஆணை எண்: 15 நாள் 18-2-2006-லும் மற்றும் 151 நாள் 3-7-1993 -லும் உள்ளது.

## தகுதிபெறு பணிக்காலம்

### 71. தகுதி பெறு பணிக்காலம் (qualifying service) என்றால் என்ன?

இடைக்காலப் பணி (under emergency provision) உள்ளிட்ட, நிலைத்த அல்லது நிலைபேறில்லாப் பணிக்கான ஓய்வூதியம் பெறுதற்குரிய பதவிகளில் பணியாற்றிய காலம் தகுதிபெறு பணிக்காலம் ஆகும். ஊதியம் பெறற்குரிய எல்லாவகை விடுப்புக் காலமும் தகுதிபெறு பணிக் காலமாகக் கொள்ளப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 2 நாள் 20-8-1979,*
*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 11முதல் 19 வரை.*

### 72. தகுதிபெறு பணிக்காலம் கணக்கீடு செய்வது எப்படி?

முழுமையான ஆண்டாக இல்லா நிலையில் 2 மாதம் 29 நாள்களாக இருப்பின், கணக்கில் எடுத்துக்கொள்ளல் கூடாது. 3 மாதம் முதல் 8மாதம் 29 நாள்கள் வரை ஒரு அரையாண்டாகவும் 9 மாதம் முதல் 12 மாதம் வரைஇரு அரையாண்டாகவும் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 268 நாள் 20-6-1986,*
*மின்வாரியச் செயலகக் கடித எண்: 77937 நாள் 28-11-2012.*

### 73. நாட்கூலியாகப் (TCL/NMR) பணி செய்த காலம் தகுதிபெறு பணிக் காலமாகக் கொள்ளப்படுமா? யார்க்குக் கணக்கில் கொள்ளப்படும்?

நாட்கூலியாகப் (TCL/NMR) பணி செய்த காலத்தின் அரைப் பங்கு தகுதிபெறு பணிக் காலமாகக் கொள்ளப்படும்.

1-1-1961 முதல் 1-4-2003 வரை நிலைநிறுத்தப் பட்டவர்க்குக் கணக்கில் கொள்ளப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 31 நாள் 8-9-2011.*

**74. பயிற்சிப் பணியாளராகத் தொகுப்பூதியத்தில் அமர்த்துமை பெற்ற காலம் தகுதிபெறு பணிக் காலமாகக் கொள்ளப்படுமா?**

கொள்ளப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 47 நாள் 16-11-2007.*

**75. படைப்பணி, தகுதிபெறு பணிக் காலமாகக் கொள்ளப்படுமா?**

படைப்பணிக் காலமும் வாரியத்தில் பணியாற்றிய காலமும் தகுதிபெறு பணிக்காலமாகக் கொள்ளப்படும். ஆனால், இடைப்பட்ட காலம் கணக்கில் கொள்ளப்படாது.

*மின்வாரிய ஆணை எண்: 101 நாள் 13-5-1991,*
*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி 17 குறிப்பு(7)-பிரிவு (5).*

**76. ஓய்வூதியக் கணக்கீட்டுக்குத் தகுதிபெறு பணிக்காலம் கணக்கீடு செய்வது எப்படி?**

தகுதிபெறு பணிக்காலம் ஒவ்வொரு அரையாண்டாகக் கணக்கிடப்படும். கணக்கீட்டில் முழு அரையாண்டுக்கு எஞ்சிய மூன்று மாதங்களும் அதற்கு மேலான பணி நாட்களும் ஒரு முழு அரையாண்டாகக் கணக்கில் கொள்ளப்படும். கணக்கீட்டில் முழு அரையாண்டுக்கு எஞ்சிய பணிக்காலம் மூன்று மாதங்களுக்குக் குறைவாக இருந்தால் கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.

*மின்வாரிய ஆணை எண்: 268 நாள் 20-6-1986.*

## ஓய்வூதியம்

**77. ஓய்வூதியம் என்றால் என்ன?**

ஓய்வு பெற்ற பணியாளர், தன் பணிக்காலத்தில் வாழ்ந்து வந்த அதே நிலையில் வாழ்வதற்கு ஏற்ப வழங்கப் பெறும் கொடுபடா ஊதியமே ஓய்வூதியம் ஆகும்.

### 78. ஓய்வூதியம் பெறற்கு உரியவர் யார்?

பணியில் பத்தாண்டுகட்குக் குறைதல் இல்லாத தகுதி பெறு பணிக்காலம் முடித்திருந்தவர் மட்டுமே, அக்காலத்திற்கு ஏற்ப ஓய்வூதியம் பெறற்கு உரியவர் ஆவார்.

பத்தாண்டுகட்குக் குறைவாகத் தகுதி பெறு பணிக்காலம் இருப்பின், ஓய்வுறும் அப்பணியாளர் சேவை பணிக்கொடை மட்டுமே பெறற்கு உரியர்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி 43(1), (2).*

### 79. ஓய்வூதியம் பெறக் குறைந்த அளவு தகுதிபெறு பணிக்காலம் எவ்வளவு தேவை?

10 ஆண்டுகள். 9 ஆண்டுகள் 9 மாதங்களுக்கு மேல் 10 ஆண்டுகளாகக் கொள்ளப்படும்.

*மின்வாரியக் கடித எண்: 77937 நாள் 28-11-2012.*

### 80. பத்தாண்டுகள் பணியாற்றிய அனைவர்க்குமே ஓய்வூதியம் உண்டா?

இல்லை. பத்தாண்டுகள் பணியாற்றி இருப்பினும் ஒருவர் தானே பணியினின்று விலகின் அல்லது பணி நீக்கம் செய்யப் படின், அவர் ஓய்வூதியம் பெறற்கு உரியர் இல்லை.

### 81. ஒருவர் தன் விருப்பம் காரணமாகத் தானே பதவி விலகல் செய்தால், ஓய்வூதியம் உண்டா?

ஓய்வூதியம் உள்ளிட்ட எந்தப் பயனும் இல்லை.

### 82. குற்றச்சாட்டுக் காரணமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர், குற்றமற்றவர் என நீதி மன்றத்தால் விடுவிக்கப் பட்டால் அவர்க்கு ஓய்வூதியப் பணப்பயன் உண்டா?

நீதி மன்றம் விடுவித்து ஆணை வழங்கிய நாள் வரை பணி செய்த காலமாகக் கணக்கில் கொண்டு ஓய்வூதியம் வழங்கப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 261 நாள் 26-8-1988.*
*மின்வாரிய ஆணை எண்: 40 நாள் 25-2-1995.*

### 83. முழு ஓய்வூதியம் பெற, எத்தனை ஆண்டுகள் பணி செய்திருக்க வேண்டும்?

30 ஆண்டுகள் தகுதிபெறு பணிக்காலம் பணி செய்திருக்க வேண்டும். 1-7-1996 முதல் இது நடைமுறையில் உள்ளது.

*மின்வாரிய ஆணை எண்: 253 நாள் 23-9-1996.*

### 84. ஓய்வூதிய அளவு என்ன?

30 ஆண்டுகள் தகுதி பெறு பணிக்காலம் முடித்து ஓய்வுறும் பணியாளர்க்கு, அவர் இறுதியாகப் பெற்ற சம்பளம் அல்லது இறுதிப் பத்து மாதச் சம்பளத்தின் சராசரி, இவற்றில் எது மிகுதியோ அதில் அரைப்பகுதி அவர்க்கு ஓய்வூதியமாக அமையும். இது முழு ஓய்வூதியம் ஆகும்.

30 ஆண்டுகட்கும் மிகையாகத் தகுதி பெறு காலம் அமையினும் ஓய்வூதியக் கணக்கீட்டிற்கு 30 ஆண்டுகளே எடுத்துக் கொள்ளப்படும்.

30 ஆண்டுகட்கும் குறைவாகத் தகுதி பெறு காலம் அமையின், முழு ஓய்வூதியத்திற்கு 30 ஆண்டுகள் என்று அடிப்படையாகக் கொண்டு கணக்கிடக், குறைவான தகுதி பெறு பணிக்காலத்திற்குத் தக, ஓய்வூதியமும் குறைவாக அமையும்.

*மின்வாரிய ஆணை எண்: 253 நாள் 23-9-1996,*

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி 43.*

### 85. ஓய்வின் தன்மைக்கேற்ப ஓய்வூதியம் வேறுபடுமா?

வேறுபடாது. ஒருவர் எந்த வகையில் ஓய்வுற்று இருப்பினும் ஓய்வூதியம் அவரின் தகுதி பெறு காலத்திற்கும் அவர் இறுதியாகப் பெற்ற சம்பள அளவிற்கும் ஏற்ப வேறுபடுமே ஒழிய, பிற காரணங்களால் வேறுபடாது.

**86. ஓய்வூதியம் கணக்கிட இறுதிச் சம்பளம் என்பது என்ன?**

இறுதியாகப் பெற்ற சம்பளம், இறுதிப் பத்து மாதச் சம்பளத்தின் சராசரி, இவற்றில் எது மிகுதியோ அது. இதில் சம்பளம் என்பது, அடிப்படைச் சம்பளம், படிநிலைச் சம்பளம், சிறப்புச் சம்பளம், தனிச் சம்பளம் ஆகியவற்றின் கூட்டுத் தொகையாகும். அகவிலைப்படி இதில் அடங்காது.

*மின்வாரிய ஆணை எண்: 28 நாள் 8-2-1988.*
*மின்வாரிய ஆணை எண்: 235 நாள் 1-12-2009.*

**87. ஓய்வூதியத்திற்கு அகவிலைப்படி உண்டா?**

உண்டு.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி 50-A*

**88. அகவிலைப்படி அனைத்துச் சம்பளத்திற்கும் உண்டா?**

இல்லை. அடிப்படைச் சம்பளம், படிநிலைச் சம்பளம் ஆகிய இரண்டிற்கே உண்டு.

*மின்வாரிய ஆணை எண்: 224 நாள் 21-11-2009.*

**89. ஓய்வூதியக் கணக்கீடு என்ன?**

$$\text{ஓய்வூதியம்} = \text{இறுதிச் சம்பளம்}^{*} \times \frac{50}{100} \times \frac{\text{பணிக்காலம்}^{**}}{60}$$

* - இறுதியாக வாங்கிய சம்பளம், இறுதி 10 மாதச் சம்பளத்தின் சராசரி, இவற்றில் எது மிகையோ, அது.

** - அரை ஆண்டுகளில் - 60க்கு மிகாமல்.

**90. ஓய்வூதியம் கணக்கிடும் போது வரும் உருபாவின் பகுதியை அடுத்த உருபாவிற்கு உயர்த்திக் கொள்ளல் கூடுமா?**

உயர்த்திக் கொள்ளலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 235 நாள் 1-12-2010.*

**91. அகவிலைப்படி கணக்கிடும்போது வரும் உருபாவின் பகுதியை அடுத்த உருபாவிற்கு உயர்த்திக் கொள்ளல் கூடுமா?**

31-12-2009 வரை உள்ள காலங்களுக்கு உயர்த்திக் கொள்ளலாம். ஆனால், 1-1-2010 முதல் 50 பைசாவும் அதற்கு மேலுமிருந்தால்தான் அடுத்த உருபாவிற்கு உயர்த்திக் கொள்ளல் வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 201 நாள் 14-10-2009,*
*மின்வாரிய ஆணை எண்: 62 நாள் 19-4-2010.*

**92. ஓய்வூதியம் அளிப்பு அளவு, இவ்வளவுதான் என்ற வரையறை உண்டா?**

உண்டு. ஓய்வூதியம் குறைந்த அளவாக உருபா 3050/-க்குக் குறைந்து இருக்கக் கூடாது. அஃதாவது குறைந்த அளவு ஓய்வூதியம் உருபா 3050/- ஆகும். மிகை அளவு, மின்வாரியத்தில் உயர்ந்த அளவு ஊதியமான உருபா 67000/+9500/-இல் பாதிக்கு மிகாமல் இருக்க வேண்டும். அஃதாவது, மிகை அளவு உருபா 38250/.

*மின்வாரிய ஆணை எண்: 235 நாள் 1.12.2009,*
*மின்வாரிய ஆணை எண்: 392 நாள் 20.11.1985.*

***93. ஓய்வுபெற உள்ள பணியாளரின் மனைவி, ஓய்வூதிய விண்ணப்பப் படிவத்தில் தன் நிழல் படத்தை ஒட்டவும் கையொப்பமிடவும் மறுத்தால், ஓய்வூதியப் பயன்கள் பணியாளர்க்கு வழங்கப்படுமா?***

வழங்கப்படும்.

***94. கூடுதல் ஓய்வூதியம் (அகவை அடிப்படையில்) யார் யார்க்கு உண்டு? எவ்வளவு?***

கருணை ஓய்வூதியரல்லாத அனைவர்க்கும் கூடுதல் ஓய்வூதியம் உண்டு.

| அகவை முதல் | அகவை வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் கூடுதல் |
|---|---|---|
| 80 | 84 | 20% |
| 85 | 89 | 30% |
| 90 | 94 | 40% |
| 95 | 99 | 50% |
| அகவை 100 க்கு மேல் | | 100% |

*மின்வாரிய ஆணை எண்: 24 நாள் 6-8-2011.*

***95. அப்போதைக்கான (provisional) ஓய்வூதியம் என்றால் என்ன?***

ஆட்சிமுறை ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளபோது ஓய்வுபெற இசைவளிக்கப்பட்ட நிலையில், ஓய்வூதியர்க்கு வழங்கப்படும் ஓய்வூதியம்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி எண்: 60*

***96. அப்போதைக்கான (provisional) ஓய்வூதியத்தை எவ்வளவு காலம் நீட்டிக்கலாம்?***

துறை நடவடிக்கை அல்லது நீதிமன்ற நடவடிக்கை முடியும் வரை நீட்டிக்க வேண்டும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978: விதி 60.*

*97. அப்போதைக்கான* **(provisional)** *ஓய்வூதியத்தின் அளவு என்ன?*

முடிவாக வரற்குரிய ஓய்வூதியத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும்

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி 60 .*

## சேவைப் பணிக்கொடை

*98. சேவைப் பணிக்கொடை* **(Service Gratuity)** *என்றால் என்ன?*

10 ஆண்டுகளுக்குக் குறைவாகப் பணி செய்து ஓய்வுற்றவர்க்குப் பணிக்காலத்திற்கு ஏற்ப ஒரு நேர அளிப்பாக (one time payment) வழங்கப்படும் தொகை சேவைப் பணிக்கொடை ஆகும்.

பணியாளர் பணி முடித்த ஒவ்வொரு அரை ஆண்டிற்கும் ஒரே வீதமாக அரை மாத ஊதியம் என்று 14.12.1987 முதல் கணக்கிடப் படுகிறது.

*மின்வாரிய ஆணை எண்: 28 நாள் 8-2-1988,*
*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி 43.*

*99. சேவைப் பணிக்கொடை பெறுபவர்க்கு இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை வழங்கப்படுமா?*

5 ஆண்டுகள் தகுதிபெறு பணிக்காலம் முடித்திருந்தால் இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை வழங்கப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 28 நாள் 8-2-1988.,*
*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி 43&45.*

*100. ஒருவர் உருபா 1000 ஊதியம் (அகவிலைப்படி இன்றிப்) பெற்று, 9 ஆண்டுகள் 9 மாதத்திற்குக்*

**குறைவாகப் பணி செய்து ஓய்வுற்றால், அவர்க்குச் சேவைப் பணிக்கொடைக் கணக்கீடு என்ன?**

பத்தாண்டுகட்குக் குறைவாக (9 ஆண்டுகள் 9 மாதத்திற்குக் குறைவாக)த் தகுதி பெறு பணிக்காலம் இருப்பின், பணியாளர் பணி முடித்த ஒவ்வொரு அரை ஆண்டிற்கும் ஒரே வீதமாக அரை மாத ஊதியம் என்று 14.12.1987 முதல் சேவைப் பணிக்கொடை கணக்கிடப்படும். 14.12.1987 -க்கு முன்னர்ச் சேவைப் பணிக்கொடை முன்னர் அளிக்கப்பட்ட அட்டவணைப்படி கணக்கிடப்படும்.

ஒருவரின் தகுதி பெறுகாலம் 9 ஆண்டுகள் (18 அரை ஆண்டுகள்) ஆகவும் பணியாளரின் இறுதிச் சம்பளம் 1000 எனவும் இருப்பின், அவர் பெறும் சேவைப் பணிக்கொடை:

14-12-1987-க்கு முன் = 1000 x 7 3/4 = 7750.
14-12-1987-முதல் = 1000 x 18 x 1/2= 9000.

*மின்வாரிய ஆணை எண்: 28 நாள் 8-2-1988*

## குடும்ப ஓய்வூதியம்

**101. குடும்ப ஓய்வூதியம் (family pension) எந்நாள் முதல் நடைமுறையில் உள்ளது?**

1- 4- 1964 முதல்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 49.*

**102. களப்பணியாளர்க்கு எந்நாள் முதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது?**

1-7-1986 முதல்.

*மின்வாரிய ஆணை எண்: 5 நாள் 26-6-1986..*

**103. பணியில் இருக்கும்போது இறந்த பணியாளரின் குடும்பத்திற்குக் குடும்ப ஓய்வூதியம் உண்டா?**

உண்டு. மேலும், பணியில் இணையும்போது மருத்துவச் சான்று அளித்திருந்தால், ஓராண்டிற்குக் குறைவாகப் பணி புரிந்திருந்தாலும் உண்டு.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 49(2) b.,*
*மின்வாரிய ஆணை எண்: 22 நாள் 14-2-1990.*

**104. தற்கொலை செய்து கொண்ட பணியாளரின் குடும்பத்தார்க்குக் குடும்ப ஓய்வூதியம் உண்டா?**

உண்டு.

*மின்வாரிய ஆணை எண்: 1073 நாள் 27-5-1972*

**105. இறந்துவிட்ட பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை நடைமுறையில் இருப்பின், குடும்ப ஓய்வூதியம் உண்டா?**

உண்டு.

*மின்வாரிய ஆணை எண்: 1073 நாள் 27-5-1972*

**106. இடைக்காலப் பணி நீக்கத்தின் போது பணியாளர் இறக்க நேரிடின், குடும்ப ஓய்வூதியம் வழங்கப் படுமா?**

வழங்கப் படும். இறந்த நாள் வரை பணிக் காலமாகக் கொண்டு கணக்கிட்டுக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 1073 நாள் 27-5-1972.*

**107. அப்போதைக்கான (provisional) ஓய்வூதியம் பெற்று வருபவர் இறக்க நேரிடின், அவரின் வாரிசுக்குக் குடும்ப ஓய்வூதியம் உண்டா?**

உண்டு. அப்போதைக்கான (provisional) ஓய்வூதியம் 12 மாதங்களுக்கு மட்டும் தரப்படும். அதற்குள் அனைத்து

ஆவணங்களும் கொடுத்துக் குடும்ப ஓய்வூதியம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்:* 86 நாள் 20-11-1999.

***108. மனநோய் (mentally disabled) உள்ள திருமணமான மகனுக்கு வாழ்நாள் முழுதும் குடும்ப ஓய்வூதியம் உண்டா?***

வாழ்நாள் முழுதும் உண்டு.

*மின்வாரிய ஆணை எண்: 39 நாள் 14-10-2010.*

***109. குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் மனநோய் (mentally disabled) உள்ள திருமணமான மகன் இறக்க நேரிடின், அவர்தம் மனைவிக்குக் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப் படுமா?***

அளிக்கப் படாது.

*மின்வாரிய ஆணை எண்: 39 நாள் 14-10-2010.*

***110. குடும்ப ஓய்வூதியம் பெற்று வருபவர் மறுமணம் செய்து கொண்டால், குடும்ப ஓய்வூதியம் தொடருமா?***

தொடராது.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 49 (6).*

***111. தொகுப்பூதியம் (consolidated wage) பெறும் பயிற்சி உதவியாளர் (trainee) இறக்க நேரிடின் அவரின் வாரிசுக்குக் குடும்ப ஓய்வூதியம் உண்டா?***

உண்டு.

*மின்வாரியக் கடித எண்: 108980 நாள் 1-6-2004.*

***112. குடும்ப ஓய்வூதியம் பெற, வாரிசு சான்று தேவையா?***

ஓய்வூதிய ஆணையில் குடும்ப ஓய்வூதியம் பெறக் கூடியவரின் பெயர் இருக்குமானால், வாரிசு சான்று தேவை இல்லை.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 48416 நாள் 12-10-1982.*

**113. பணியிலுள்ள குடும்ப ஓய்வூதியர் பெறும் குடும்ப ஓய்வூதியத்திற்கு அகவிலைப்படி உண்டா?**

உண்டு.

*மின்வாரிய ஆணை எண்: 71 நாள் 25-4-2008.*

**114. பணியாளரின் இறப்புக்கு முன்பே அவரின் துணை (மனைவி/கணவன்) இறந்துவிட்ட நிலையில், பணியாளரின் குழந்தைகட்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கு முறை என்ன?**

குழந்தைகளில் ஆண்/பெண் என்ற பாகுபாடின்றி மூத்தவர்க்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். அவரின் மாத வருவாய் உருபா 2550-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

பெண்ணுக்கு அவரின் திருமணம் அல்லது 25 அகவை, இவற்றில் எது முன்னரோ அதுவரை வழங்கப்படும். ஆணுக்கு 25 அகவை வரை வழங்கப்படும்.

மூத்தவர் தகுதி இழக்கும்போது அவரின் இளையவர்க்குத் தகுதி இருப்பின் வழங்கப்படும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 49 (8).*

**115. ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர் இருவரும் இறந்துவிட்ட நிலையில், குடும்ப ஓய்வூதியம் அகவை 25-ஐக் கடந்தும் யார்க்கு, எந்த வரையறைகளில் வாழ்நாள் முழுதும் வழங்கப்படும்?**

கணவரால் கைவிடப்பட்ட மகள், விதவை மகள், திருமணம் செய்து கொள்ளாத மகள் ஆகியோரில் ஒருவர்க்குக் குடும்ப ஓய்வூதியம், அகவை 25-ஐக் கடந்த பின்னும் அவரின் வாழ்நாள் வரை வழங்கப்படும். இது 28-11-2011 முதல் நடைமுறையில் உள்ளது.

அதற்கான வரையறைகள்:

i. அவர் வாழ்நாள் இறுதிவரை குடும்ப ஓய்வூதியம் பெறற்குத் தகுதியானவராய் இருத்தல் வேண்டும்.

ii. குடும்பத்தில் 25 அகவைக்குக் குறைவான தகுதி வாய்ந்த குழந்தைகள் இருத்தல் கூடாது.

iii. குடும்பத்தில் ஊனமுற்ற குழந்தைகள் இருத்தல் கூடாது.

iv. மணம்/மறுமணம் செய்து கொள்ளல் கூடாது. செய்து கொண்டால், குடும்ப ஓய்வூதியம் உடன் நிறுத்தப்படும்.

v. மூத்தவட்கு முதலில் குடும்ப ஓய்வூதியம் வாழ்நாள் வரை வழங்கப்படும். அவர் மணம் செய்து கொள்ளின் அல்லது இறக்க நேரின், அடுத்த தகுதி வாய்ந்த (கணவரால் கைவிடப்பட்ட, விதவையான, திருமணம் செய்து கொள்ளாத) இளைய மகள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவார்.

vi. அவரின் மாத வருவாய் உருபா 2550-க்கு மிகாதிருக்க வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 51 நாள் 6-9-2012.*

**116. புதிய ஊதிய மாற்றத்திற்கு விருப்பம் அளிக்காமல் பணியாளர் இறக்க நேரிடின், அவர்க்கு ஊதிய மாற்றம் வேண்டி அவரின் வாரிசு விண்ணப்பம் அளிக்க வேண்டுமா?**

வேண்டா. வாரியமே பணியாளர்க்கு நற்பயன்கள் கிடைக்கும் வகையில் ஊதியப் பொருத்தம் அளிக்க வேண்டும்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 1398/C1/86-1 நாள் 21-3-1986.*

**117. அரசு ஊழியரால் தத்தெடுக்கப்பட்ட திருமணமாகா மகள், மகனுக்குக் குடும்ப ஓய்வூதியம் உண்டா?**

உண்டு.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி எண்: 49(13) 6 (iii).*

**118. குடும்பம் இல்லா ஓய்வூதியர் இறப்பின், வாழ்நாள் நிலுவை மற்றும் ஓய்வூதிய நலநிதி யார்க்குக் கிடைக்கும்?**

ஒரு அறக்கட்டளையையோ ஒரு குழுவையோ அல்லது

தனி ஒருவரையோ பணியாளர் அவரது வாழ்நாளில் நியமித்திருந்தால், அப்படி நியமிக்கப்பட்ட அதற்கோ அல்லது அவர்க்கோ கிடைக்கும்.

*மின்வாரியக் கடித எண்: 87450 நாள் 14-12-1999.*

**119. துணை (கணவன்/மனைவி) இல்லா நிலையில் பணியாளர் ஓய்வுற்ற பின்னர்த் திருமணம் செய்து கொண்டு, பின்னர் அவர் இறக்க நேரின் அந்தத் துணைக்குக் குடும்ப ஓய்வூதியம் உண்டா?**

ஓய்வூதியர் தம் வாழ்நாளில் அதற்கானப் படிவத்தை நிறைவு செய்து ஓய்வூதியம் அனுமதிக்கும் அலுவலர்க்கு அனுப்பியிருந்தால், அத்துணைக்கு(கணவன்/மனைவி)க் குடும்ப ஓய்வூதியம் பெற உரிமை உண்டு.

*மின்வாரிய ஆணை எண்: 261 நாள் 4-12-1993.*

**120. குடும்ப ஓய்வூதியம் பெறுதற்குத் தகுதியுள்ளவர் இரட்டைக் குழந்தைகளாக இருப்பின், குடும்ப ஓய்வூதியம் எவ்வாறு வழங்கப்படும்?**

குடும்ப ஓய்வூதியம் இருவர்க்கும் சம பங்குகளாகப் பிரிக்கப்பட்டு வழங்கப்படும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 49 (8) (b).*

**121. ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் என இரு ஓய்வூதியம் பெறுபவர்க்கு இரண்டு மருத்துவப் படி வழங்கப்படுமா?**

ஒரு மருத்துவப்படி மட்டுமே வழங்கப்படும்.

*மின்வாரியக் கடித எண்: 87451 நாள் 24-1-2000.*

**122. குடும்ப ஓய்வூதியர்க்கு மருத்துவப்படி உண்டா?**

உண்டு. இப்பொழுது உருபா 100 வழங்கப் படுகிறது.

*மின்வாரிய ஆணை எண்: 235 நாள் 1-12-2009.*

**123. இறந்த பணியாளரின் துணை மறுமணம் செய்து கொண்டால் அவர்க்குக் குடும்ப ஓய்வூதியம் உண்டா?**

இல்லை.

*மின்வாரியக் கடித எண்: 9548 / Q2/ 85-2 நாள் 18-4-1985,*
*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி எண்: 49 (6).*

**124. இறந்த பெண் பணியாளரின் கணவர் மறுமணம் செய்துகொண்ட நிலையில், அவர்க்கு அகவை முதிராக் குழந்தைகள் இருப்பின், அக்குழந்தைகட்குக் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப் படுமா?**

அளிக்கப் படும். இறந்த பெண் பணியாளரின் இயல் காப்பாளரான தந்தை வழி, அவர் குழந்தைகட்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். ஆனால், அவர் சட்டப்படியான காப்பாளர் என்பதை உரிமையியல் நடுவர் மன்றம் ஏற்க வேண்டும்.

*மின்வாரியக் கடித எண்: 9548 / Q2/ 85-2 நாள் 18-4-1985.*
*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி 49 (6)*

**125. மணமுறிவு பெற்ற மனைவி/கணவர் வழிப் பிறந்த பணியாளர்/ஓய்வூதியரின் குழந்தைகட்குக் குடும்ப ஓய்வூதியம் உண்டா?**

உண்டு. குழந்தைகளின் காப்பாளராக மணமுறிவு பெற்ற மனைவி/கணவன் இருப்பின் அவர் வழியும் அப்படி அவர் இல்லா நிலையில் சட்டப்படியான காப்பாளர் வழியும் வழங்கப்படும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 49(11-B) (a),*
*மின்வாரியக் கடித எண்: 27476 நாள் 6-5-1995.*

**126. ஓய்வூதியத் திருத்தம் செய்யப்படும் போதெல்லாம் குடும்ப ஓய்வூதியமும் திருத்தம் செய்யப்படுமா?**

ஆம்.

*மின்வாரியக் குறிப்பாணை ஆணை: 28310 நாள் 13-11-1992.*

## 127. குடும்ப ஓய்வூதிய அளவு எவ்வளவு?

நிலை 1: தொடர் பணிக்காலம் 7 ஆண்டுகட்குக் குறையாமல் இருந்தால்:

i. குறைந்தது உருபா 3050/ ஆகும்.

ii. பணியாளர் இறந்த நாளிலிருந்து 7 ஆண்டுகள் அல்லது பணியாளரின் அகவை 65-ஐ அடைந்திருக்கக் கூடிய நாள், இவற்றில் எது முன்னரோ, அதுவரை பணியாளர் இறுதியாகப் பெற்ற ஊதியத்தில் 50 % (உருபா 38,250/ -க்கு மிகாமல்). அதற்குப்பின் 30 % (உருபா 22,950/ -க்கு மிகாமல்).

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 49(3)(a),*
*மின்வாரியக் குறிப்பாணை எண்: 27582 /N1/91-6 நாள் 31-3-1992*
*மின்வாரிய ஆணை எண்:* 187 நாள் 7-9-1993,
*மின்வாரிய ஆணை எண்:* 235 நாள் 1-12-2009.

**நிலை 2:** தொடர் பணிக்காலம் 7 ஆண்டுகட்குக் குறைவாக இருந்தால்,

பணியாளர் இறுதியாகப் பெற்ற ஊதியத்தில் 30 % அல்லது உருபா 3050/, இவற்றில் எது மிகையோ அது.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 49 (2) (i).*

## 128. கணவன்/மனைவி இருவரும் பணியில் இருந்து இறக்க நேரிடின், அவரின் வாரிசுக்கு இருவரின் குடும்ப ஓய்வூதியமும் வழங்கப்படுமா?

வழங்கப்படும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 49 (11a) (b).*

## 129. குடும்ப ஓய்வூதியம் இறந்த பணியாளரின் பெற்றோர்க்கு எந்தச் சூழ்நிலைகளில் வழங்கப்படும்?

i. பணியாளரின் வாரிசு வேறு எவரும் குடும்ப ஓய்வூதியம் பெறும் தகுதி உடையவராய் இருத்தல் கூடாது.

ii. பணியாளர் உயிருடன் இருந்தபோது பெற்றோர் அவரையே சார்ந்து இருந்திருக்க வேண்டும்.

iii. பெற்றோரின் மாத வருவாய் உருபா 2550/-க்குள் இருத்தல் வேண்டும்.

iv. தாய்க்கு முதலில் வழங்கப்படும்.

v. தாய் இறந்திருந்தால்/இறப்பின் தந்தைக்கு வழங்கப்படும்.

*மின்வாரியக் கடித எண்: 98834 நாள் 30-11-2001.*

**130. காணாமற் போன பணியாளர்/ஓய்வூதியர் குடும்பத்திற்கு எந்நாள் முதல் குடும்ப ஓய்வூதியம் வழங்கப் படும்?**

காவல் துறையில் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டுகள் முடிந்த பின்னரே குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி உடையதாகும்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 47202-N1/ 91-1 நாள் 5-3-1993.*

**131. காணாமற் போன ஊழியரின் குடும்ப வாரிசுக்குக் குடும்ப ஓய்வூதியமும் பணிக்கொடையும் அனுமதிப்பது யார்?**

வாரிய உறுப்பினர் குழுமம் (Full Board).

*மின்வாரிய ஆணை எண்: 233 நாள் 2-9-1991.*

**132. காணாமற் போன ஊழியரின் வாரிசுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமா?**

வழங்கப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 227 நாள் 17-10-1998*

***133. காணாமற் போன ஊழியரின் வாரிசுக்கு வேலை வாய்ப்புக் கேட்டு எந்தக் கால வரையறைக்குள் விண்ணப்பிக்க வேண்டும்?***

வழக்கு மன்றம் அவர் இறந்துவிட்டார் என அறிவித்த நாளிலிருந்து 3 ஆண்டுகட்குள்.

*மின்வாரிய ஆணை எண்: 227 நாள் 17-10-1998.*

## இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை

***134. இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை* (Death cum Retirement Gratuity) *என்றால் என்ன?***

இஃது ஒரு ஒட்டு மொத்த பணமளிப்பு ஆகும். பணியாளர் ஐந்து ஆண்டுகள் பணி முடித்துச் சேவைப் பணிக்கொடை அல்லது ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவராய் இருத்தல் வேண்டும். பணிக்கொடை அவர் ஆற்றிய தகுதி பெறு பணிக்காலத்திற்கு ஏற்ப அமையும்; ஆற்றிய ஒவ்வொரு ஆறு மாதப் பணிக் காலத்திற்கும் அவர் இறுதியாகப் பெற்ற ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கென்று கணக்கிடப் படும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி எண்: 45* (C).

***135. இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடைக்கு உரியவர் யார்?***

ஓய்வுறும் பணியாளர்க்கு தகுதி பெறு பணிக்காலம் 5 ஆண்டுகளும் அதற்கு மேலும் இருப்பின், இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடைக்கு உரியர் ஆவார்.

ஓராண்டிற்குக் குறைவான தகுதி பெறு பணிக்காலம் பணியாளர்க்கு இருந்தாலும் இறக்க நேரிடும் போது, இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை வழங்கப் படுகிறது.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி எண்:* 45 (1) (a), (b).

### 136. 30 ஆண்டுகள் தகுதிபெறு பணிக்காலம் உள்ள ஒருவற்கு முழு ஓய்வூதியம் கிடைப்பது போல, முழுப் பணிக்கொடை கிடைக்குமா?

கிடைக்காது. முழு பணிக்கொடை கிடைக்க 33 ஆண்டுகள் தகுதிபெறு பணிக்காலம் முடித்திருக்க வேண்டும்.

33 ஆண்டுகட்கு மிகையாகத் தகுதிபெறு காலம் இருப்பினும் 33 ஆண்டுகளாகவே எடுத்துக் கொள்ளப்படும். குறைவாக இருப்பின், அக்காலத்திற்குத் தகப் பணிக்கொடை அமையும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி எண்: 45*(C).

### 137. ஓய்வு பெற்ற பணியாளர்க்கு இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை கணக்கிடுவது எப்படி?

பணியாளர் இறுதியாகப் பெற்ற ஊதியத்தில், அவர் பணி முடித்த ஒவ்வொரு 6 மாதத் தகுதிபெறு பணிக் காலத்துக்கும் கால் பங்கு வீதம் முழு தகுதிபெறு காலத்திற்கும் கணக்கிட்டு, அப்படி வரும் தொகை இறுதி ஊதியத்தின் 16 1/2 மடங்கிற்கு மிகாமலும் உருபா 10,00,000/-க்கு மிகாமலும் இருக்குமாறு கணக்கிடப்படும்.

இங்கு ஊதியம் என்பது இறுதி அடிப்படை சம்பளம், படிநிலை சம்பளம், சிறப்புச் சம்பளம், தனிநிலை சம்பளம், அகவிலைப்படி அனைத்தும் சேர்ந்தனவாம். அடிப்படை சம்பளம், படிநிலை சம்பளம் ஆகிய இரண்டிற்கே அகவிலைப் படி உண்டு.

*மின்வாரிய ஆணை எண்: 235 நாள் 1-12-2009,*
*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி எண்: 45*(C).

### 138. இறந்த பணியாளர்க்கான இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை கணக்கிடல் எப்படி?

| பணி செய்த காலம் | பணிக்கொடை அளவு |
|---|---|
| ஓராண்டிற்குக் குறைவாக | இறுதியாகப் பெற்ற மாத ஊதியத்தின் இரு மடங்கு |
| ஓராண்டும் அதற்கு மேலும் ஆனால், ஐந்து ஆண்டிற்குக் குறைவாக | இறுதியாகப் பெற்ற மாத ஊதியத்தின் ஆறு மடங்கு |

| பணி செய்த காலம் | பணிக்கொடை அளவு |
|---|---|
| ஐந்தாண்டும் அதற்கு மேலும் ஆனால், இருபது ஆண்டிற்குக் குறைவாக | இறுதியாகப் பெற்ற மாத ஊதியத்தின்பன்னிரண்டு மடங்கு |
| இருபதாண்டும் அதற்கு மேலும் | பணிமுடித்த ஒவ்வொறு ஆறு மாதத் தகுதிபெறு பணிக் காலத்திற்கும் அரைப்பங்கு இறுதி மாத ஊதியம் என்று இறுதி ஊதியத்தின் 33 மடங்கிற்கு மிகாமலும் உருபா 10,00,000/ -க்கு மிகாமலும் |

*மின்வாரிய ஆணை எண்: 28 நாள் 8-2-1988,*
*மின்வாரிய ஆணை எண்: 235 நாள் 1-12-2009,*
*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி எண்: 45 (6).*

**139. ஓய்வுபெறு பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருப்பின், இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக் கொடை வழங்கப் படுமா?**

வாரியத்திற்கு நிதி இழப்பு இல்லை என்றால் வழங்கப் படும்.

*மின்வாரிய ஆணை எண்: 308 நாள் 6-10-1988*

**140. நிதி இழப்பு இருப்பின், இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை வழங்கப் படுமா?**

வழங்கப் படும்; ஆனால், இழப்பீட்டைக் கணக்கிட்டு, அதைப் பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை வழங்கப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 194 நாள் 30-10-1992,*
*மின்வாரியக் குறிப்பாணை எண்: 19011 நாள் 21-11-1992.*

**141. வழக்கு மன்றங்களால் இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடையைக் கைப்பற்றல் முடியுமா?**

முடியாது.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 70, குறிப்பு 2, மின்வாரியக் குறிப்பாணை எண் 79956 நாள் 30-11-1994.*

**142. பணியாளர் இறக்க நேரின், இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை பெறற்கு உரியர் யார்?**

பணியாளரால் அமர்த்துமை (Nomination) பெற்ற குடும்ப உறுப்பினரே உரியர்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 48.*

**143. பணியாளர், தம் விருப்பப்படி பணிக்கொடை பெறற்கு யாரை வேண்டுமானாலும் அமர்த்துமை செய்தல் முடியுமா?**

செய்தல் முடியாது; அமர்த்துமை பெறுபவர் குடும்ப உறுப்பினரில் ஒருவராகத்தான் இருத்தல் வேண்டும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 48.*

**144. பணியாளர், அமர்த்துமை செய்யாமலே இறந்துவிடின், பணிக்கொடை யார்க்கு வழங்கப்படும்?**

பணியாளரின் உயிரோடுள்ள அனைத்துக் குடும்ப உறுப்பினர்க்குச் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 45.*

**145. இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை வழங்க ஏதேனும் கால வரையறை உண்டா?**

உண்டு. 3 மாதத்திற்குள் வழங்க வேண்டும். அதற்கு மேல் வட்டியும் சேர்த்து வழங்க வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 302நாள் 7-11-1989,*
*மின்வாரிய ஆணை எண்: 11நாள் 22-1-1990.*

**146.** ***நாட்கூலிப் (TCL/NMR) பணிக்காலத்தைக் கணக்கில் கொண்டு பணிக்கொடை வழங்கப்படுமா?***

8-9-2011-க்குப்பின் ஓய்வுற்றவர்க்கு அப்படி வழங்கப்படும்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 83647 நாள் 14-2-2012.*

## ஓய்வூதியத் தொகுத்தளிப்பு

## இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை

**147.** ***ஓய்வூதியத் தொகுப்பளிப்பு (Commutation of Pension) என்றால் என்ன?***

பணியாளர் ஓய்வுறுங்கால், தான் பெறற்குரிய ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை 15 ஆண்டுக் காலத்திற்கு ஒப்படைத்து, அதன்மூலம் ஒரு பெருந் தொகையைப் பெறுதல் ஆகும்.

*குடிமையியல் ஓய்வூதிய விதி, 1944: விதி 11(2).*

**148.** ***ஒப்படைப்புக் காலம் 15 ஆண்டுகள் என்பதின் தொடக்கம் எப்போதிலிருந்து?***

தொகுப்பளிப்பைத் தலைமை உண்முகத் தணிக்கை அலுவலர் அனுமதித்த நாளிலிருந்து தொடங்கும்.

*குடிமையியல் ஓய்வூதிய விதி, 1944: விதி 11(2),*
*மின்வாரிய ஆணை எண்: 260 நாள் 3-10-1991.*

**149.** ***தொகுப்பளிப்பு நிறைவு பெறும் நாளில் முழு ஓய்வூதியம் பெற விண்ணப்பம் அளிக்க வேண்டுமா?***

ஆம். வாரியத்தின் தலைமை உண்முகத் தணிக்கை அலுவலர்க்கு விண்ணப்பம் அளித்தல் வேண்டும்.

*தமிழ்நாடு அரசு ஆணை எண்: 67 நாள் 25-1-1996.*

**150. தொகுப்பளிப்பு வேண்டி எப்போது வேண்டுமானாலும் விண்ணப்பம் அளிக்கலாமா?**

அளிக்கலாம். ஓய்வூதிய ஆணை வழங்கிய நாளிலிருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பம் அளித்தால் மருத்துவச் சான்று அளித்தல் தேவையில்லை. ஆனால், ஓராண்டிற்குப்பின் அளித்தால் மருத்துவச் சான்று தேவை.

மருத்துவச் சான்றின் மூலம் ஓய்வு பெற்றவர் தொகுப்பளிப்பிற்கான மருத்துவச் சான்று பெற்றுத்தான் விண்ணப்பம் செய்ய முடியும்.

*மின்வாரிய ஆணை எண்: 93 நாள் 21-3-1983.*

**151. ஓய்வூதியர்க்கு அவரின் பணிக்காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டிய ஊதிய மாற்றம் பின்னர் அளிக்கப்படின், அதன் தொடர்ச்சியாகத் தொகுப்பளிப்புப் பெற மருத்துவச் சான்று பெற வேண்டுமா?**

ஓய்வு பெற்றபோது தொகுப்பளிப்பிற்கு விருப்பம் தெரிவித்திருந்து தொகுப்பளிப்புப் பெற்றிருந்தால் தேவை இல்லை.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 79409 நாள் 12-3-1990.*

**152. தொகுப்பளிப்புப் பெறல் கட்டாயமா?**

இல்லை.

*மின்வாரிய ஆணை எண்: 610 நாள் 22-4-1978.*

**153. ஓய்வூதியர் இறக்க நேரின், தொகுப்பளிப்புக் காலம் என்னவாகும்?**

அவர் இறந்த நாளோடு முடிந்துவிடும். பின்னர்த் தொடராது.

*தமிழ்நாடு அரசு ஆணை எண்: 242 நாள் 1-4-1981,*
*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 49 (2A) (II)*

**154. அனைத்து வகை ஓய்வூதியரும் தொகுப்பளிப்புப் பெற முடியுமா?**

முடியாது. மூப்போய்வு, விருப்போய்வு, இயலாமை ஓய்வு மற்றும் கட்டாய ஓய்வு பெற்றவர் மட்டுமே தொகுப்பளிப்புப் பெற முடியும்.

*மின்வாரிய ஆணை எண்: 227 நாள் 8-12-1992.*

**155. எந்தச் சூழலில் ஓய்வூதியர்க்குத் தொகுப்பளிப்பு வழங்கப்படாது?**

வாரிய ஒழுங்கு நடவடிக்கையோ, வழக்குமன்ற நடவடிக்கையோ நிலுவையில் உள்ள போது.

*மின்வாரிய ஆணை எண்: 227 நாள் 8-12-1992.*

**156. இரண்டாம் முறை தொகுப்பளிப்புப் பெறல் இயலுமா?**

முடியாது.

*உரிமையியல் ஓய்வூதிய விதி, 1944: விதி 12.*

**157. ஓய்வூதியத் தொகுப்பளிப்பு விண்ணப்பம் அளித்து, அதைப் பெறுவதற்கு முன்னர் ஓய்வூதியர் இறந்துவிட்டால், தொகுப்பளிப்பு வழங்கப்படுமா? வழங்கப்படும் எனின் யார்க்கு வழங்கப்படும்?**

வழங்கப்படும். ஓய்வூதிய விதி 1978, விதி 48-ன் படி அமர்த்துமை பெற்றவர்க்கு வழங்கப்படும். அமர்த்துமை இல்லா நிலையில் வாரிசுக்கு வழங்கப்படும்.

*குடிமையியல் ஓய்வூதிய விதி, 1944: விதி 12 (1), (2),*
*மின்வாரியக் குறிப்பாணை எண்: 115 203 நாள் 27-2-2003,*
*மின்வாரிய ஆணை எண்: 360 நாள் 14-7-1982.*

**158. அப்போதைக்கான (provisional) ஓய்வூதியம் பெறுபவர்க்குத் தொகுப்பளிப்பு உண்டா?**

இல்லை. ஓய்வூதியம் முறைப்படுத்தப் படும்போது விண்ணப்பம் செய்யலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 227 நாள் 8-12-1992.*

**159.** நாட்கூலிப் **(TCL/NMR)** பணிக்காலத்தைக் கணக்கில் கொண்டு தொகுப்பளிப்பு வழங்கப்படுமா?

8-9-2011-க்கு முன் ஓய்வுற்றவர்க்கு ஓய்வூதிய உயர்வு மட்டுமே வழங்கப்படும். அதற்குப்பின் ஓய்வுற்றவர்க்கு தொகுப்பளிப்பும் வழங்கப்படும்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 83647 நாள் 14-2-2012.*

**160.** ஓய்வூதியத்தில் எத்தனை விழுக்காடு ஒப்படைப்புச் செய்து தொகுப்பளிப்புப் பணம் பெறப் படுகிறது?

1-4-1998 -ற்கு முன்னர் 33 1/3 %
1-4-1998 -லிருந்து 30-11-2009 வரை 40%
1-12-2009 முதல் 33 1/3%

*மின்வாரிய ஆணை எண்: 208 நாள் 18-8-1998,*
*மின்வாரிய ஆணை எண்: 235 நாள் 1-12-2009.*

**161.** தொகுப்பளிப்புக்காக ஒப்படைக்கும் ஓய்வூதியத்தின் பகுதி கணக்கிடும்போது வரும் உருபாவின் பகுதியை அடுத்த உருபாவிற்கு உயர்த்திக் கொள்ளலாமா?

முடியாது.

*மின்வாரியக் கடித எண்: 740 நாள் 21-12-1985.*

**162.** தொகுப்பளிப்புத் தொகை கணக்கிடும்போது வரும் உருபாவின் பகுதியை அடுத்த உருபாவிற்கு உயர்த்திக் கொள்ளலாமா?

உயர்த்திக் கொள்ளலாம்.

*மின்வாரியக் கடித எண்: 740 நாள் 21-12-1985.*

## பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டம் - 1974

**163. பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டம், 1974 (Employees' Family Security Fund, 1974) என்றால் என்ன?**

பணியாளரின் ஊதியத்திலிருந்து மாதம் ஒரு சிறு தொகையைத் (இப்போது உருபா 75/) தொடர்ந்து பிடித்தம் செய்து, அவர் ஓய்வு பெறும்போது அவர்க்கும் அல்லது இறக்க நேரிடின் அவரின் குடும்பத்தார்க்கும் ஒரு கணிசமான தொகையை வழங்குவது இந்தத் திட்டத்தின் பயன் ஆகும்.

*மின்வாரிய ஆணை எண்: 1074 நாள் 3.7.1974.*

**164. குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டம் 1974-இன் கீழ் இப்போது வழங்கப்படும் தொகை எவ்வளவு?**

பணியாளர் இறக்க நேரின் அவரின் வாரிசுக்கு,

| | |
|---|---|
| 1974 திட்டத்தின் கீழ் | உருபா 140000/ |
| பாதுகாப்புத் துணைநிதித்திட்டத்தின் கீழ் | உருபா 10000/ |
| ஆக மொத்தம் | உருபா 150000/ |

வழங்கப்படும்.

பணியாளர் ஓய்வுற்றால் அவர் செலுத்திய சந்தாத் தொகை வட்டியுடன் சேர்த்து வழங்கப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 41 நாள் 12-5-1986,*
*மின்வாரிய ஆணை எண்: 49 நாள் 11-10-2006.*

**165. குடும்பப் பாதுகாப்புத் துணை நிதித்திட்டம் என்றால் என்ன?**

பணியாளர் இறக்க நேரின், அவர் குடும்பத்திற்கு உருபா 10,000 இத்திட்டத்தின்படி அளிக்கப்படும். 1-4-1985 முதல்

இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. பணியாளர் பங்களிப்பு இத்திட்டத்தில் ஏதுமில்லை. பணியாளர் ஓய்வு பெற்றால் பணப்பயன் இல்லை.

*மின்வாரிய ஆணை எண்: 41 நாள் 12-5-1986 .*

குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டம், குடும்பப் பாதுகாப்புத் துணை நிதித்திட்டம் ஆகிய இரு திட்டங்களும் இணைக்கப்பட்டுச் சிறு மாற்றங்களோடு 1-7-1991 முதல் பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்பு துணை நிதித்திட்டம் எனப் பெயரிடப்பட்டது.

*மின்வாரிய ஆணை எண்: 21 நாள் 2-2-1993 .*

**166. குடும்பப் பாதுகாப்பு நிதியைப் பெறத் துணையில்லா நிலையில், அமர்த்துமை செய்யப்பட்டவர் இறந்துபடின், இத்தொகை யார்க்கு வழங்கப்படும்?**

இறந்துவிட்ட அமர்த்துமை செய்யப்பட்டவரின் வாரிசுக்கு வழங்கப்படும்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 4046 நாள் 14-3-1998.*

**167. இத்திட்டத்தில் உள்ள பணியாளர் தற்கொலை போன்றவற்றால் இறக்க நேரின், பணப்பயன் உண்டா?**

உண்டு. இறப்புச் சான்று அல்லது இறந்தவரின் பிண ஊர்வலத்தில் கலந்து கொண்ட உதவி செயற்பொறியாளர் தகுதிக்குக் குறையாத அலுவலரின் சான்று அளிக்கப்பட வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 248 நாள் 1-9-1989.*

## பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை-1984.

*168. பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை-1984* **(Special Provident Fund cum Gratuity-1984)** *என்றால் என்ன?*

பணியாளர் ஓய்வு பெறுங்கால் மேலும் பயனடையும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. சீரான மாதத் தவணையாக உருபா 20/ பணியாளர் ஓய்வு பெறும் வரையிலோ அல்லது தவணைத் தொகையும் வட்டியும் சேர்த்து உருபா 5000/ வரும் வரையிலோ ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும்.

பணியாளர் ஓய்வுறுங்கால் அவர் செலுத்திய தவணைத் தொகை வட்டியுடன் வாரியப் பங்களிப்பாக உருபா 10,000-உம் சேர்த்து வழங்கப்படும்.

இறக்க நேரின், வாரியப் பங்களிப்பு வழங்கப்பட மாட்டாது.

*மின்வாரிய ஆணை எண்: 76 நாள் 31-8-1985,*
*மின்வாரியக் கடித எண்: 94181 நாள் 17-11-2000,*
*மின்வாரிய ஆணை எண்: 57 நாள் 27-10-2002.*

*169. பணியாளரிடம் எந்நாள்வரை பிடித்தம் செய்யப்படும்?*

ஓய்வுபெறும் நாளுக்கு முன் ஒரு மாதம் வரை.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 18644 நாள் 6-6-1990.*

*170. ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருக்கும் நிலையில், ஓய்வு பெற அனுமதி அளிக்கப்பட்டு ஓய்வு பெற்ற ஊழியரும் இத்திட்டம் மூலம் பணம் பெற முடியுமா?*

முடியும்.

*மின்வாரிய ஆணை எண்: 83 நாள் 30-12-1988,*
*மின்வாரிய ஆணை எண்: 336 நாள் 16-12-1989.*

171. ஓய்வு பெறும் பணியாளர்க்கு இத்திட்டத்தில் வட்டிக் கணக்கீடு செய்வது எப்படி?

*மின்வாரிய ஆணை எண்: 57 நாள் 25-10-2002* -இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை-2000

172. பணிக்கொடைத் திட்டம் 1984-இல் உள்ளவர் பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் 2000 **(special provident fund cum gratuity-2000)-** இல் இணைய விண்ணப்பிக்க வேண்டுமா?

வேண்டா. தவணைத் தொகை உருபா 50/ செலுத்த வேண்டும். ஆனால் இணைய விரும்பாதவர் விண்ணப்பம் தரல் வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 37 நாள் 22-5-2002.*

173. 1-6-2002-க்குப் பின்னர்ப் பணி அமர்த்தப் பட்டவர் இத்திட்டத்தில் சேர்வது கட்டாயமா?

ஆம்.

*மின்வாரிய ஆணை எண்: 37 நாள் 22-5-2002.*

174. 1-6-2002-க்குப் பின்னர்ப் பணி அமர்த்தப்பட்டு இத்திட்டத்தில் சேர்பவர் செலுத்த வேண்டிய தவணைத் தொகை எவ்வளவு?

உருபா 70/- ஆக இருந்தது, 1-6-2006 முதல் உருபா 75/- ஆகும்.

*மின்வாரிய ஆணை எண்: 37 நாள் 22-5-2002,*
*மின்வாரிய ஆணை எண்: 49 நாள் 11-10-2006.*

**175. 1-6-2002-க்குப் பின்னர்ப் பணி அமர்த்தப் பட்டவர் இத்திட்டத்தில் பெறும் பணப்பயன் என்ன?**

ஓய்வு பெறுகையில் அவர் செலுத்திய தொகை வட்டியோடு வாரியப் பங்களிப்பான உருபா 10,000/ சேர்த்து அளிக்கப்படும். இடையில் இறந்துபடின் வாரியப் பங்களிப்பு கிடையாது.

*மின்வாரிய ஆணை எண்: 37 நாள் 22-5-2002.*

**176. பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை-1984-ல் உள்ளவர், பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை-2000 -ல் இணைந்து பின்னர் ஓய்வுற்றால், வாரியப் பங்களிப்பு உண்டா?**

இல்லை.

*மின்வாரிய ஆணை எண்: 37 நாள் 22-5-2002.*

**177. 1-6-2002 -க்கு முன்னர்ப் பணியில் இருந்து பின் இறந்தாலோ, முப்போய்வு போன்ற இன்ன பிற வழி ஓய்வு பெற்றாலோ இத்திட்டத்தில் பெறும் பயன் என்ன?**

அவர் செலுத்திய தவணைத் தொகை வட்டியுடன் வாரியப் பங்களிப்பில்லாமல் வழங்கப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 37 நாள் 22-5-2002.*

## ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

**178. ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் (Pensioners' Family Security Fund Scheme) என்றால் என்ன?**

ஓய்வூதியர் இறக்க நேரிடின், ஓய்வூதியரின் வாரிசுக்குக் குடும்பப் பாதுகாப்பு நிதியாக ஓர் ஒட்டு மொத்த உதவித் தொகை வழங்குவது இத்திட்டத்தின் பயன் ஆகும்.

இத்திட்டத்தின் பயன்பெற, ஓய்வூதியர் ஒரு குறிப்பிட்ட பங்குத் தொகையை மாதமாதம் செலுத்தல் வேண்டும். உருபா 50,000/ இப்போது வழங்கப்படுகிறது. இத்திட்டம் 31-3-1987 முதல் நடைமுறையில் உள்ளது.

*மின்வாரிய ஆணை எண்: 21 நாள் 26-3-1997,*
*மின்வாரிய ஆணை எண்: 49 நாள் 5-9-2012,*
*மின்வாரிய ஆணை எண்: 190 நாள் 15-7-2013.*

**179. இந்த நிதிக்கு ஓய்வூதியர் இப்போது செலுத்த வேண்டிய மாதத் தவணை எவ்வளவு?**

1-6-2013 முதல் உருபா 80/

*மின்வாரிய ஆணை எண்: 190 நாள் 15-7-2013.*

**180. இத்திட்டத்தில் பயன்பெற, ஓய்வூதியர் எத்தனை காலம் பங்குத் தொகை செலுத்தி இருத்தல் வேண்டும்?**

12 மதங்கள் என்று முன்னர் இருந்ததை 1 மாதமென்று குறைத்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

*மின்வாரிய ஆணை எண்: 23 நாள் 3-8-2011.*

**181. ஓய்வூதியர் இறக்க நேரின், இவ்வொட்டு மொத்த உதவி நிதி அவரின் துணை (மனைவி/கணவன்) தவிர வேறு யார்க்கும் வழங்கப்படுமா?**

துணை உயிரோடு இருப்பின், வேறு யார்க்கும் வழங்கப்பட மாட்டாது. துணை இல்லாவிடில் ஓய்வூதியரின் வாரிசுக்கோ அல்லது அவரால் அமர்த்துமை செய்யப்பட்ட ஒருவர்க்கோ வழங்கப்படும்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 4046 நாள் 14-3-1998.*

**182. ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாமா?**

விலகிக் கொள்ளலாம்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 54935 நாள் 2-6-1998.*

183. ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தில் சேர்ந்து சில காலத்திற்குப் பின் விலக நேரின், அதுவரை பிடித்தம் செய்த தொகையைத் திரும்பப் பெறல் முடியமா?

முடியும்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 54935 நாள் 2-6-1998.*

## ஓய்வூதியர் மருத்துவ நலநிதித் திட்டம்

184. ஓய்வூதியர் மருத்துவ நலநிதித் திட்டம் (**Pensioners' Health Fund Scheme**) என்றால் என்ன?

ஓய்வூதியத்தில் குறிப்பிட்ட ஒரு தொகையை மாதமாதம் பிடித்தம் செய்து, ஓய்வூதியரின் மருத்துவச் செலவை ஈடுசெய்ய, மிகையளவாக உருபா 1,00,000/ அல்லது செலவில் 75% ஓய்வூதியர்க்கு வழங்குவது இத்திட்டப் பயன்பாடாகும்.

18-12-2010 முதல் ஓய்வூதியர் தம் துணையின் (மனைவி / கணவன்) மருத்துவச் செலவையும் இக்கணக்கில் கொள்ளலாம். ஆனால் வழங்கு தொகை இருவரின் மருத்துவ செலவையும் சேர்த்து மேற்குறிப்பிட்ட மிகை அளவிற்குள் அமையும்.

*மின்வாரிய ஆணை எண்: 13 நாள் 18-12-2010.*

185. இத்திட்டம் குடும்ப ஓய்வூதியர்க்கும் பொருந்துமா?

பொருந்தும். குடும்ப ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கும் போது, இத்திட்டத்தில் இணைவதற்கான விருப்பைத் தெரிவிக்க வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 14 நாள் 18-12-2010.*

186. ஓய்வூதியரின் துணையைத் தவிர்த்து மற்ற குடும்ப உறுப்பினர்க்கு இத்திட்டத்தில் பயன் பெற முடியுமா?

முடியாது.

*மின்வாரிய ஆணை எண்: 13 நாள் 18-12-2010.*

**187. இத்திட்டத்தின் கீழ் எந்த நோய்க்கும் எந்த மருத்துவ மனையிலும் பண்டுவம் (Treatment) பெறலாமா?**

எந்த நோய்க்கும் தமிழ்நாட்டிற்குள்ளோ அன்றி வெளி மாநிலத்திலோ, அரசு மருத்துவ மனையிலோ அன்றித் தனியார் மருத்துவ மனையிலோ, எங்கும் பண்டுவம் (சிகிச்சை) பெறலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 15 நாள் 18-12-2010 ,*
*மின்வாரிய ஆணை எண்: 50 நாள் 5-9-2012.*

**188. கண் மருத்துவத்திற்கான செலவுத் தொகைக்கு மிகையளவு உண்டா?**

இல்லை. மிகை அளவு உருபா 10,000/ என்று முன்னர் இருந்தது நீக்கப்பட்டு விட்டது.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 26935 நாள் 9-11-2011.*

**189. மருத்துவ நலநிதிக்கு இப்போது எவ்வளவு தவணைத் தொகை பிடித்தம் செய்யப்படுகிறது?**

மாதம் உருபா 150/.

*மின்வாரிய ஆணை எண்: 11 நாள் 19-3-2012.*

**190. மருத்துவ நலநிதியின் கீழ் மருத்துவச் செலவுத் தொகையைப் பெற என்ன செய்ய வேண்டும்?**

உண்முகத் தணிக்கை அலுவலர்க்கு விண்ணப்பிக்க வேண்டும். (குறிப்பிட்ட படிவம் என்று ஏதும் கிடையாது.) விண்ணப்பத்துடன் கீழ்க்கண்டவற்றை இணைத்தல் வேண்டும்.

1) மருத்துவமனை விடுவிப்புச் சுருக்கம் (Discharge Summary).

இதில் மருத்துவர் அவர்தம் பதிவு எண், முத்திரை இவற்றுடன் மருத்துவமனையின் முத்திரையும் இட்டுக் கையொப்பம் இட்டிருக்க வேண்டும். மருத்துவர்க்காக என வேறெவரும் கையொப்பம் இட்டிருத்தல் கூடாது

2) மருந்துக் குறிப்பு (Prescription)

3) வாங்கிய மருந்துகட்கான பணப்பட்டியல்கள்.

பணப் பட்டியல்களில் மருத்துவர் முத்திரையுடன் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும். உருபா 5000-க்கு மேல் இருந்தால் வரி வில்லை (revenue stamp) ஒட்டியிருக்க வேண்டும்.

### 191. மருத்துவச் செலவை ஈடுசெய்யும் திட்டத்தின் கீழ் (Reimbursement) எந்த மருத்துவ மனையில் வேண்டுமானாலும் சிகிச்சை பெறலாமா?

முடியாது. அரசு மருத்துவ மனைகளில் மட்டுமே சிகிச்சை பெறவேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 55நாள் 10-9-2012.*

### 192. ஓய்வூதியர், அவரின் துணை மற்றும் குடும்ப ஓய்வூதியர் ஆகியோரின் மருத்துவச் செலவுகளைச் "செலவு ஈடு செய்" முறையில் பெற வாய்ப்பு உண்டா?

உண்டு. ஆனால், அரசு மருத்துவ மனைகளில் மட்டுமே பண்டுவம் பெறல் வேண்டும். அந்தச் செலவுகட்கானப் பணத்தை மருத்துவ மனையில் செலுத்திப் பண்டுவம் பெற்று, அதன்பின்னர் மின்வாரியத்திலிருந்து முழு மருத்துவச் செலவையும் திரும்பப் பெறலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 55நாள் 10-9-2012.*

## பணிப் பாராட்டு

**193. ஓய்வுபெறும் பணியாளரைப் பாராட்டும் முறை என்ன?**

அவர் இறுதியாகப் பணியாற்றிய அலுவலகத்தில், வாரியம் சார்ந்ததாகப் பாராட்டு விழா நடத்தப்பெறும். அலுவலகத் தலைமை அலுவலர் பொன்னாடை போர்த்திப் பணிப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசுடன் இறுதிநிலைப் பயன்கட்கான காசோலையும் வழங்குவார்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 58749 நாள் 16-8-1989,*
*மின்வாரியக் குறிப்பாணை எண்: 80008 நாள் 21-12-1990,*
*மின்வாரியக் குறிப்பாணை எண்: 79859 நாள் 23-9-2005.*

**194. பொன்னாடை எவ்வளவு மதிப்பில் இருக்க வேண்டும்?**

உருபா 150/ மதிப்பில்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 111623 நாள் 15-2-2005.*

**195. பணிப் பாராட்டுச் சான்றிதழ் எந்த மொழியில் இருக்க வேண்டும்?**

தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 233 நாள் 4-9-2001.*

**196. நினைவுப் பரிசு எவ்வளவு மதிப்பில் இருக்க வேண்டும்?**

உருபா 130/-க்கு மிகாது இருத்தல் வேண்டும்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 79859 நாள் 29-9-2005.*

197. ஓய்வு பெறு பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை இருப்பின், பணிப் பாராட்டுச் சான்றிதழ் அளிக்கலாமா?

கூடாது. ஆனால், பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்கப் படுவார்.

*மின்வாரியக் குறிப்பாணை எண்:80008 நாள் 23-3-1991.*

198. பணிப் பாராட்டு யார் யார்க்குக் கிடையாது?

கட்டாய ஓய்வு மற்றும் இயலாமை ஓய்வில் செல்பவர்க்குக் கிடையாது.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 25709 நாள் 25-1-94.*

## ஓய்வுப் பயணப்படி

199. ஓய்வு பெறு பணியாளர்க்குப் பயணப்படி உண்டா?

உண்டு. இறுதியாகப் பணியாற்றிய ஊரிலிருந்து அவரின் சொந்த ஊர்க்குச் செல்லப் பயணப்படி அளிக்கப் படும்.

*தமிழ்நாடு மின்வாரியப் பயணப்படி ஒழுங்கு விதி எண்: 80-A.*

200. பயணப் படியின் அளவு என்ன?

பணியில் இருந்து ஊர் மாற்றத்தில் சென்றால், அப் பணியாளர்க்கு என்ன பயணப்படி உண்டோ, அதே அளவு.

*தமிழ்நாடு மின்வாரியப் பயணப்படி ஒழுங்கு விதி எண்: 80-A.*

201. ஓய்வுற்றவர் எவ்வளவு காலத்திற்குள் பயணம் செய்திருந்தால் பயணப்படி உண்டு?

ஓய்வு பெற்ற நாளிலிருந்து ஆறு மாதங்கட்குள் பயணம் மேற்கொண்டிருக்க வேண்டும்.

*தமிழ்நாடு மின்வாரியப் பயணப்படி ஒழுங்கு விதி எண்: 80-A.*

**202. எவ்வளவு காலத்திற்குள் பயணச் செலவுப் பட்டியல் அனுப்பப்படல் வேண்டும்?**

பயணம் மேற்கொண்ட மூன்று மாதங்கட்குள் செலவுப் பட்டியல் அனுப்பப்படல் வேண்டும்.

*தமிழ்நாடு மின்வாரியப் பயணப்படி ஒழுங்கு விதி எண்: 80-A.*

**203. பணியாளர் பணியில் உள்ளபோது இறந்துவிட்டால், அவரின் குடும்பத்தார்க்குச் சொந்த ஊர் செல்லப் பயணப்படி உண்டா?**

உண்டு.

*தமிழ்நாடு மின்வாரியப் பயணப்படி ஒழுங்கு விதி எண்: 85.*

**204. பணியாளர் பணியில் உள்ளபோது இறந்துவிட்டால் அவரின் குடும்பத்தார் பயணப் படியை முன்னதாகப் பெற முடியுமா?**

முடியும்.

*தமிழ்நாடு மின்வாரியப் பயணப்படி ஒழுங்கு விதி எண்: 80-A.*

## பணியாளர் இறுதிப் பயணச் சலுகை

**205. பணியில் இருக்கையில் பணியாளர் இறக்க நேரிடின், வாரியச் செலவில் அவரின் உடலைச் சொந்த ஊர்க்குக் கொண்டு செல்லலாமா?**

வாரியச் செலவில் வாரிய ஊர்தியில் இறந்த பணியாளரின் உடலை அவரின் சொந்த ஊர்க்குக் கொண்டு செல்லலாம். தமிழ்நாடன்றிப் புதுச்சேரி, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் அவரின் சொந்த ஊர் இருந்தாலும் அங்கும் கொண்டு செல்லலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 58 நாள் 18-12-1984,*
*மின்வாரிய ஆணை எண்: 31 நாள் 26-5-1989.*

**206. பணியாளர் வெளி மாநிலத்தில் பணியிலுள்ளபோது இறந்து விட்டால், வானூர்தியில் அவரின் உடலைக் கொண்டு வரலாமா?**

குடியிருக்கும் இடத்திற்கோ, சொந்த ஊர்க்கோ, இறுதிச் சடங்கு நடைபெற உள்ள இடத்திற்கோ, அவற்றிற்கு அருகிலுள்ள வானூர்தி நிலையத்திற்குக் கொண்டு வரலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 14 நாள் 12-1-1987.*

## பிற செய்திகள்

**207. மின்வாரியத்திலிருந்து ஓய்வுற்ற பணியாளரின் மகன், மகள் ஆகியோர்தம் கல்விக்காக வாரியத்தில் தொழிலகப் பயிற்சியோ வேறு திட்டப் பயிற்சியோ மேற்கொள்ளக் கட்டணம் உண்டா?**

இல்லை. கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

*மின்வாரிய ஆணை எண்: 7 நாள் 01-02-2011.*

**208. வாழ் சான்று (Life Certificate), வேலையில்லாச் சான்று, திருமணம்/மறுமணம் செய்து கொள்ளாச் சான்று ஒவ்வோராண்டும் தரல் வேண்டுமா?**

ஆம்.

*மின்வாரிய ஆணை எண்: 192 நாள் 5-9-2005.*

**209. இச்சான்றுகளை எப்போது தரல் வேண்டும்?**

ஒவ்வோராண்டும் ஏப்பரல் மாத முதல் நாளிலிருந்து சூன் மாதக் கடைசி நாளுக்குள் தரவேண்டும். தவறினால், சூலை மாதத்தில் தலைமை உண்முகத் தணிக்கை அலுவலர் அழைக்கும் நாளில் நேரில் சென்று சான்றளிக்கவேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 192 நாள் 5-9-2005.*

**210. வாழ் சான்று, வேலையில்லாச் சான்று, திருமணம்/மறுமணம் செய்து கொள்ளாச் சான்று அளிக்கத் தவறின் என்ன ஆகும்?**

ஆகத்து மாதத்திலிருந்து ஓய்வூதியம் நிறுத்தப் பட்டுவிடும்.

*மின்வாரிய ஆணை எண்: 192 நாள் 5-9-2005.*

**211. விழா முன்பணம் பெற ஓய்வூதியர் என்ன செய்தல் வேண்டும்?**

எந்த விழாவிற்கு என்பதைத் தெரிவித்துத் தலைமை உண்முகத் தணிக்கை அலுவலர்க்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 90 நாள் 31.3.1998.*

**212. விழா முன்பணம் பெற ஆண்டுதோறும் விண்ணப்பித்தல் வேண்டுமா?**

தேவையில்லை. ஒரு முறை விண்ணப்பித்த அதே விழாவிற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 90 நாள் 31.3.1998.*

**213. ஒவ்வோர் ஆண்டும் வேறு வேறு விழாவிற்கு முன்பணம் வேண்டுவோர் என்ன செய்தல் வேண்டும்?**

ஒவ்வோர் ஆண்டும் அந்தந்த விழாவைக் குறிப்பிட்டு விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 90 நாள் 31.3.1998.*

**214. குடும்ப ஓய்வூதியர்க்கு விழா முன்பணம் உண்டா?**

இல்லை.

*மின்வாரிய ஆணை எண்: 90 நாள் 31.3.1998.*

**215. இப்பொழுது விழா முன்பணம் எவ்வளவு?**

உருபா 2000/. பத்துத் தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 15நாள் 2-5-2013.*

**216. ஓய்வூதியர்க்குப் பொங்கல் பரிசு எப்பொழுதிருந்து வழங்கப்படுகிறது?**

1990 முதல் வழங்கப் படுகிறது.

*மின்வாரிய ஆணை எண்: 5 நாள் 10-1-1990.*

**217. பொங்கல் பரிசு யார் யார்க்கு வழங்கப் படுகிறது?**

ஓய்வூதியர், குடும்ப ஓய்வூதியர், கருணை ஓய்வூதியர் ஆகியோர்க்கு வழங்கப்படுகிறது.

*மின்வாரிய ஆணை எண்: 5 நாள் 10-1-1990,*
*மின்வாரிய ஆணை எண்: 5 நாள் 14-1-2008,*
*மின்வாரிய ஆணை எண்: 12 நாள் 9-1-2013.*

**218. அப்போதைக்கான (provisional) ஓய்வூதியம் , அப்போதைக்கான (provisional) குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்க்குப் பொங்கல் பரிசு உண்டா?**

உண்டு.

*மின்வாரியக் கடித எண்: 38091 நாள் 12-6-1997.*

**219. பொங்கல் பரிசு இப்பொழுது எவ்வளவு?**

உருபா 500/ வழங்கப் படுகிறது.

*மின்வாரிய ஆணை எண்: 8 நாள் 19-1-2010.*

**220. பணியாளரின் பணி இடையே தடைபடின் (interruption of service), அத்தடைக்கு முன்னுள்ள பணிக்காலம் என்னவாகும்?**

பணி விலக்கம் செய்து மீண்டும் பணியமர்த்தப் பட்டவர் தவிர்த்து மற்றவர்க்கு அப்படியே கணக்கில் கொள்ளப்படும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்-1978, விதி எண்: 24.*

**221. பணி விலக்கம் (removal from service) செய்யப்பட்டால், அதற்கு முன்னுள்ள பணிக்காலம் என்ன ஆகும்?**

இழப்பீட்டுக்கு உள்ளாகும்.

*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 24,*
*அரசு ஆணை எண்: 349 நாள் 5-5-1995.*

**222. பதவி விலகல் ஏற்கப்படு முன்னர், அதற்கான விண்ணப்பத்தைத் திரும்பப் பெறலாமா?**

பெறலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 31 நாள் 2-7-1999.*

**223. பதவி விலகல் ஏற்றுக் கொண்ட பின்னர்ப் பணியாளரால் விண்ணப்பத்தைத் திரும்பப் பெறல் முடியுமா?**

முடியாது.

*மின்வாரிய ஆணை எண்: 31 நாள் 2-7-1999.*

**224. பதவி விலகல் விண்ணப்பத்தை உயர் அலுவலர்க்கு எத்தனை நாட்கட்குள் அனுப்ப வேண்டும்?**

15 நாட்கட்குள்.

*மின்வாரியக் கடித எண்: 011292 நாள் 15-4-1986.*

**225. பதவி விலகல் விண்ணப்பத்தை ஏற்க நிபந்தனை என்ன?**

மின்வாரிய ஆணை எண்: 379 நாள் 15-11-1985 -ஐப் பார்க்க.

**226. ஓய்வூதியர் மீது அலுவல் சார்ந்த குற்றச்சாட்டு ஏற்படின், அவர் மீது விசாரணை தொடர, விழிப்புப்பணித் துறை ஆணையரிடம் அனுமதி பெற வேண்டுமா?**

ஆம்.

*மின்வாரிய ஆணை எண்: 19 நாள் 25-4-1995.*

**227. பணியாளர் இறக்க நேரிடின், அவரைச் சார்ந்துள்ள அவரின் தாய்க்கு இறந்தவரின் குடும்பத்தார்க்கென வழங்கப்படும் பணப்பயன் கிடைக்குமா? எனில் அவை என்ன?**

கிடைக்கும்.

கீழ்க்கண்ட பயன்கள் தாயையும் சேர்த்துக் குடும்ப உறுப்பினர் அனைவர்க்கும் சம பங்குகளாகப் பிரித்து அளிக்கப்படும்.

1) இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை.
2) ஈட்டிய விடுப்பைப் பணமாக்கல்.

கீழ்க்கண்ட பயன்கள், அமர்த்துமை இல்லா நிலையில் தாயையும் சேர்த்துக் குடும்ப உறுப்பினர் அனைவர்க்கும் சம பங்குகளாகப் பிரித்து அளிக்கப்படும்.

1) பொது வைப்பு நிதி.
2) பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை 1984
3) பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை 1984

*மின்வாரிய ஆணை எண்: 7 நாள் 6-9-1977,*
*மின்வாரியக் குறிப்பாணை எண்: 39643 நாள் 6-9-1977,*
*தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி எண் - 45 (6) (I, II, III, IV).*

**228. வாழ்நாள் நிலுவைத்தொகை என்றால் என்ன?**

ஒரு பணியாளரோ அல்லது ஓய்வூதியரோ இறக்க நேரிடின், அவர் இறந்த நாள் வரை உள்ள காலத்திற்கு அவர்க்குச்

சேர வேண்டிய நிலுவைத் தொகை வாழ்நாள் நிலுவைத் தொகை எனப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 22 நாள் 30-1-1988.*

**229. ஓய்வூதியரின் வாழ்நாள் நிலுவைத்தொகை யார்க்கு வழங்கப்படும்?**

அமர்த்துமை பெற்றவர்க்கே வழங்கப்படும். அமர்த்துமை இல்லாத போது வாரிசுகட்குச் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

*மின்வாரிய ஆணை எண்: 22 நாள் 30-1-1988,*
*மின்வாரியக் கடித எண்: 49895 நாள் 6-11-1989.*

**230. ஓய்வூதியர்க்கு அடையாள அட்டை வழங்கப் படுகிறதா?**

வழங்கப் படுகிறது.

*மின்வாரிய ஆணை எண்: 124 நாள் 7-7-2009.*

**231. ஓய்வூதியர் அடையாள அட்டை பெற, நேரில் செல்லல் வேண்டுமா?**

தேவை இல்லை.

*மின்வாரியக் குறிப்பாணை எண்: 87925 நாள் 7-2-2013.*

**232. ஓய்வூதியர் அடையாள அட்டை பெறுதல் எவ்வாறு?**

கடவைச் சீட்டு அளவுப் புகைப்படத்துடன் உரிய படிவத்தில் ஓய்வூதியம் அனுமதித்த அலுவலர்க்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

*மின்வாரிய ஆணை எண்: 124 நாள் 7-7-2009.*

**233. ஓய்வூதிய அளிப்பு ஆணை (Pension Payment Order) காணாமற் போய்விடின், என்ன செய்தல் வேண்டும்?**

கட்டணமின்றி மாற்றுப் படி பெற்றுக் கொள்ளலாம்.

*மின்வாரிய ஆணை எண்: 15 நாள் 17-8-2010.*

**234. மாதத்தின் முதல்நாள் பொது விடுமுறையாக இருப்பின், ஓய்வூதியம் பெறுவது எப்போது?**

அதற்கு முன் மாதத்தின் கடைசிப் பணி நாளில் பெற்றுக் கொள்ளலாம்.

*வங்கிச் சுற்றறிக்கை எண்: 2 / 98-99 நாள் 16-4-1998,*
*மின்வாரியக் கடித எண்: 83067 நாள் 19-12-1995.*

**235. ஒரு குறிப்பிட்ட மாதத்தில் வங்கிக்கு ஓய்வூதியப் பண விவரப் பட்டியல் (scroll) உரிய நாளில் வராவிடில், ஓய்வூதியம் பெறும் வழி என்ன?**

அதற்கு முன் மாதத்தின் பட்டியல் அடிப்படையில் வங்கி ஓய்வூதியம் வழங்கும்.

*வங்கிச் சுற்றறிக்கை எண்: 2 / 98-99 நாள் 16-4-1998.*

**236. ஓய்வூதியர் ஒருவர் இன்று இறக்க நேரிடின், குடும்ப ஓய்வூதியம் எவ்வாறு கணக்கிடப்படும்?**

எடுத்துக் காட்டு:

முழு ஓய்வூதியம் பெற தகுதியான ஓய்வூதியர்:

| 5-ஆவது ஊதியக்குழு பரிந்துரையின்படி | ஓய்வூதியம் 50% | குடும்ப ஓய்-வூதியம் 30% |
|---|---|---|
| 1. அடிப்படை ஓய்வூதியம் | உருபா 1701/ | உருபா 1021/ |
| 2. அகவிலைப்படி 148% | உருபா 2518/ | உருபா 1512/ |
| 3. இடைக்கால நிவாரணம் | உருபா 50/ | உருபா 50/ |
| 4. 10% இடைக்கால நிவாரணம் | உருபா 171/ | உருபா 103/ |
| 5. அடிப்படை ஓய்வூதியத்தில் சிறப்பளிப்பு 40% | உருபா 681/ | உருபா 409/ |
| 6. திருத்திய அடிப்படை ஓய்வூதியம் | உருபா 5121/ | உருபா 3095/ |

| 6-ஆவது ஊதியக்குழுப் பரிந்துரையின்படி | ஓய்வூதியம் 50% | குடும்ப ஓய்வூதியம் 30% |
|---|---|---|
| 1. அடிப்படை ஓய்வூதியம் | உருபா 5121/ | உருபா 3095/ |
| 2. அகவிலைஓய்வூதியம் 1-8-2006 முதல் | உருபா 2561/ | உருபா 1548/ |
| 3. அகவிலைப்படி 24% 1-1-2006 அன்று | உருபா 1844/ | உருபா 1115/ |
| 4. அடிப்படை ஓய்வூதியத்தில் சிறப்பளிப்பு 40% | உருபா 2049/ | உருபா 1238/ |
| 5. திருத்திய அடிப்படைஓய்வூதியம் | உருபா 11575/ | உருபா 6996/ |

குறிப்பு:

1. அடிப்படை ஓய்வூதியத்துடன் , அவ்வப்போது அறிவிக்கப்படும் விழுக்காட்டில் அகவிலைப்படியும், மருத்துவப் படியும் சேர்த்து "ஓய்வூதியமாக" வழங்கப்படும்.

2. இந்த எடுத்துக் காட்டில் ஓய்வூதியர் ஓய்வு பெற்று 15 ஆண்டுகள் முடிந்து விட்டதால், அவரின் ஓய்வூதியத்தில் ஒப்பளிப்புக்கானத் தொகை பிடித்தம் செய்யப்பட மாட்டாது. அஃதாவது, அவர் முழு அடிப்படை ஓய்வூதியம் பெறுவார்.



# மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை வெளியீடுகள்

## அகர முதலிகள்:

ஆட்சிச் சொற்கள் அகரமுதலி

பொறியியற்றுறைக் கலைச்சொற்கள் அகரமுதலி

## பாவியங்கள்:

செம்பியன் தமிழவேள் - சி. செந்தமிழ்ச்சேய்
(தமிழக அரசின் பரிசு பெற்றது.)

வெண் பூக்கள் - க.பொ. இளம்வழுதி
(திருப்பூர்த் தமிழ்ச்சங்கப் பரிசு பெற்றது)

## வரலாற்றுப் புதினங்கள்:

செம்பியன் தமிழவேள் - சி. செந்தமிழ்ச்சேய்
(தமிழக அரசின் பரிசு பெற்றது.)

நற்சோணை - இராச. வேதாந்தம்

கல்லணை கண்ட காவலன் - இராச. வேதாந்தம்

கொங்கச்செல்வி - இராச. வேதாந்தம்

நாமார்க்கும் குடியல்லோம் - இராச. வேதாந்தம்


சீறிச் சினந்த சேல்விழி - இராச. வேதாந்தம்

## பிற நூல்கள்:

மரபும் திரிபும் - க.பொ. இளம்வழுதி

சஞ்சீவினி - இராச. வேதாந்தம்

பழுத்ததில் துளிர்த்தது - ந. இராசகோபாலன்



## இந்நூல்...

- ஒய்வூதியர்க்கு உரித்து என்பதினும் ஒய்வுறவுள்ள பணியாளர்க்கு உற்றது; உகந்தது.

- அரசு துறைகளைச் சார்ந்த அனைத்துப் பணியாளர்க்கும் ஓய்வூதியர்க்கும் பொதுமையானதே.

- வாரிய ஆணைகள் காட்டப் பெற்று இருப்பினும் அவை யாவும் அரசு ஆணைகளின் அடிப்படையாக அமைந்தவையே.